பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 ஆனி 13 செவ்வாய்க்கிழமை 27.06.2023 கதிர் 228

## தென்னக்கோனை விடுவித்தது நீதிமன்று

மேல்மாகாணத்திற்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மாஅதிபர் தேசபந்து தென்னக்கோனுக்கு எதிரான இரு சட்ட விடயங்களை மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று தள்ளுபடி செய்துள்ளது.

2022 மே 9 காலிமுகத் திடல் போராட்டத்தின் மீது தாக்குதல் நடத்தப்பட்ட சம்பவம் தொடர்பில் மூத்த பொலிஸ்மாஅதிபர் தேசபந்து தென்னக்கோனை சந்தேக நபராகப் பெயரிடுமாறு சட்டமா அதிபர் அனுப்பிய ஆவணத்தை ☞2

# தேசிய கடன் மறுசீரமைப்பை தன்னிச்சையாக முன்னெடுத்தால் அது அரச பயங்கரவாதமே

### உதய கம்மன்பில சீற்றம்

இந்த ஆட்சி தேசிய கடன் மறுசீரமைப்பைத் தன்னிச்சையாக முன்னெடுக்குமாக இருந்தால் அது அரச பயங்கரவாதமாகவே அமையும் என்று பிவித்துரு ஹெல உறுமயவின் தலைவரும், பொது ஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்தார்,

கோட்டேயில் உள்ள பிவிதுரு ஹெல உறுமய கட்சி காரியாலயத்தில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்துப் பேசியபோது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்து தெரிவித்ததாவது:

தேசிய கடன் மறுசீரமைப்பை மேற்கொள்வதில்லை என்றே ஆட்சியாளர்கள் ஆரம்பத்தில் தெரிவித்து வந்தனர். பின்னர் சர்வதேச நாணய நிதியத்தின் அழுத்தம் காரணமாகவே அந்த நிலைப்பாட்டை தற்போது மாற்றிக் கொண்டுள்ளனர். ஏனெனில் தேசிய கடன் மறுசீரமைப்பு தொடர்பில் சர்வதேச நாணய நிதியத்துடன் செய்துகொண்டுள்ள ஒப்பந்தத்தில் எங்கும் தெரிவிக்கப்படவில்லை.

பொருளாதாரத்தை ஸ்திரமான நிலையில் வைத்திருப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாகவே இந்த ஆட்சி தெரிவித்திருக்கிறது. அதனால் இதற்கு மாற்று வழி, எடுத்த கடனை நீக்கிக்கொள்வதல்ல.

இந்த ஆட்சி அவ்வாறு தேசிய கடன் மறுசீரமைப்பை மேற்கொள்வதாக இருந்தால் வங்கிகளுடன் கடன் உரிமையாளர்களுடன் கலந்துரையாடி எடுத்த கடனை செலுத்தும் கால எல்லையை நீடிக்க முடியும். அல்லது வட்டி வீதத்தை குறைக்க முடியும்.

இவ்வாறான மாற்று ☞2

## இனிது ரகசியம் அல்ல!

உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்புக்காக ரணில் தயாராகி வருகின்றார் என்கிற செய்தியை நேற்றே வாசகர்களுக்குச் சொல்லியிருந்தேன். மாத இறுதியில் இது தொடர்பாக ஒரு பாய்ச்சலுக்கு ரணில் தயாராகி வருகின்றார் என்பதையும் அதில் கோடிகாட்டியிருந்தேன்.

நேற்று அது தொடர்பான செய்திகள் கொழும்பில் பரபரப்பாக அடிபட்டன. உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பை மேற்கொள்வதற்காக நாடாளுமன்றத்தின் சிறப்புக் கூட்டத்தை சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் கூட்டுவதற்கு முடிவு செய்யப்பட்டிருப்பதாகவும் பரபரப்பான செய்தி அடிபட்டது. ஆனால் நேற்ற நள்ளிரவு வரை அதுதொடர்பான உத்தியோகபூர்வ அறிவிப்பு வரவில்லை. இருப்பினும் அந்தக் கூட்டத் தொடர் நடப்பதற்கான வாய்ப்புக்கள் அதிகம் உள்ளன.

நாளை ஆளும் தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் கூட்டம், ஜூன் 30, ஜூலை 1, 2 ஆகிய தினங்களில் அமைச்சர்கள் யாரும் வெளிநாடுகளுக்குச் செல்லக்கூடாது என்கிற கட்டுப்பாடு என்பதோடு மட்டுமல்லாமல் வார இறுதி நாட்களான ஜூலை 1, 2 ஆகிய தினங்களில் கொழும்பில் டெங்கு ☞2

# நயினாமடு சீனித் தொழிற்சாலைக்கு 72 ஆயிரம் ஏக்கர் நிலம் வழங்க முடிவு

### அதில் தொழிற்சாலைக்கு மட்டுமே 500 ஏக்கர் வழங்கப்படும்
### நேற்றைய அமைச்சரவைக் கூட்டத்தில் ஜனாதிபதி முன்மொழிவு

(ந.லோகதயாளன்)

வவுனியா மாவட்டம் நயினாமடுவில் சீனித்தொழிற்சாலை ஒன்றை அமைப்பது தொடர்பான முன்மொழிவு நேற்றைய அமைச்சரவைக் கூட்டத்தில் திடீரென முன்வைக்கப்பட்டது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே இதனை முன்வைத்தார். முதலீட்டுச் சபை மூலமாக இந்தத் திட்டம் முன்னெடுக்கப்படுவதாக அவர் அமைச்சரவைக்கு அறிவித்தார்.

ஜனாதிபதியின் அறிவிப்பின்படி நயினாமடுவில் சீன் தொழிற்சாலை அமைப்பதற்கு மட்டும் 492 ஏக்கர் நிலம் வழங்கப்படவுள்ளது. அதற்கு மேலதிகமாக தொழிற்சாலைக்கு வேண்டிய கரும்பு உற்பத்திக்காக 30 ஆயிரம் ஏக்கர் நிலம் அந்த நிறுவனத்திற்கு வழங்கப்படவுள்ளது. அத்துடன் மேலும் 42 ஆயிரம் ஏக்கர் நிலத்தை மேலதிக கரும்புச் செய்கைக்காக தனியாருக்கு வழங்கவும் முன்மொழியப்பட்டுள்ளது.

இதற்கமைய வவுனியா ☞2

# தேசிய கடன்மறுசீரமைப்பை திருட்டுத்தனமாக இந்த ஆட்சி முன்னெடுக்கும் அவசியம் என்ன?

### ஐக்கிய மக்கள் சக்தி கேள்வி

தேசிய கடன்மறுசீரமைப்பு விடயத்தினை எதற்காக திருட்டுத்தனமாக முன்னெடுப்பதற்கு இந்த ஆட்சி முனைகின்றது என்று ஐக்கிய மக்கள் சக்தி கேள்வி எழுப்பியுள்ளது

நாடாளுமன்ற வளாகத்தில் நேற்றையதினம், ஐக்கிய மக்கள்சக்தி தலைமையிலான கூட்டுஎதிர்க்கட்சிகளின் கூட்டம் நடைபெற்றது. இதன்போது ஆட்சியாளர்கள் சிறப்பு நாடாளுமன்ற அமர்வினைக் கூட்டி கொண்டுவரவுள்ள தேசிய கடன் மறுசீரமைப்பு யோசனை சம்பந்தமாகக் கவனம் செலுத்தப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலின் பின்னர் அக்கட்சியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்துமபண்டார செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

ஆட்சியாளர்கள் ஆரம்பத்தில் தேசிய கடன் மறுசீரமைப்பினைச்செய்யப்போவதில்லை என்றே அறிவித்தார்கள். ஆனால் தற்போது அவசர அவசரமாக தேசிய கடன்மறுசீரமைப்பு அறிவிப்பு விடுக்கப்படவுள்ளது.

இதற்கான அறிவிப்புக்கள் விடுக்கப்பட்டுள்ளதை நாம் அறிந்துள்ளோம். அந்த வகையில், தேசிய கடன்மறுசீரமைப்பு நடவடிக்கையில் உள்ள விடயங்கள் பகிரங்கமாக வெளியிடப்படவில்லை.

அனைத்தையும் இருட்டடிப்புச் செய்து அவசரமாக மறுசீரமைப்புநடவடிக்கைளை முன்னெடுக்கவுள்ளமைக்கான காரணம் என்ன? ஆட்சியாளர்கள் ஏன் இவ்வாறு திருட்டுத்தனமான செயற்பாடுகளை முன்னெடுகின்றார்கள்.

எதிர்க்கட்சி என்ற வகையில் எமக்கு தேசிய ரீதியில் பொறுப்புக்கள் உள்ளன. ஆகவே வெளிப்படைத்தன்மை பேணப்படவேண்டும் - என்றார்.

## லிட்ரோ காஸ் விலை குறையும்



எரிவாயு சிலிண்டரின் விலை குறைவடைய உள்ளதாக லிட்ரோ எரிவாயு நிறுவனத்தின் தலைவர் முதித பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய ஜூலை மாதம் முதல் பகுதியில் விலை குறைப்பு மேற்கொள்ளப்படவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. ☞2

# தாய்லாந்துடனான சுதந்திர வர்த்தக ஒப்பந்தப் பேச்சுவார்த்தை வெற்றி

### அரசு அறிவிப்பு

ஆசியான் நாடுகளுக்கு விசேட கவனம் செலுத்தி பிரதான மற்றும் வளர்ந்து வரும் பொருளாதாரங்களுடன் பொருளாதார உறவுகளை வலுப்படுத்தும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் தொலைநோக்குப்பார்வைக்கு அமைவாக, இலங்கை தாய்லாந்து சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் தொடர்பான ஐந்தாவது சுற்றுப் பேச்சு நேற்றுக் காலை கொழும்பில் ஆரம்பமானது.

கொழும்பு தாஜ்சமுத்திரா ஹோட்டலில் தொடங்கிய அதன் ஆரம்ப அமர்வில் கருத்துத் தெரிவித்த சர்வதேச வர்த்தக அலுவலகத்தின் இலங்கைப் பிரதிநிதிகள் குழுவின் பிரதான பேச்சாளர் கே.ஜே.வீரசிங்க, உடன்பாடு காணப்பட்ட காலவரையறையின்படி நடைமுறைப்படுத்தப்படுகின்ற இலங்கை தாய்லாந்து சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் தொடர்பான பேச்சின் முன்னேற்றம் குறித்து திருப்தி அடைய முடியும் என்று குறிப்பிட்டார்.

அடுத்த கட்டப் பேச்சு தாய்லாந்தில் ஒகஸ்ட் 21 முதல் 23, வரை நடைபெறும் என்றும், 2024 மார்ச்சில் ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும் என்றும் அவர் தெரிவித்தார். 2024 ஆம் ஆண்டு பெப்ரவரியில் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ள இறுதிப் பேச்சுக்கு முன்னதாக மேலும் மூன்று சுற்றுப் பேச்சுவார்த்தைகளை ☞2

## மூன்று நாள் பயணமாக யாழ். வருகிறார் மைத்திரி

முன்னாள் ஜனாதிபதியும், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவருமான மைத்திரிபால சிறிசேன யாழ்ப்பாணத்துக்கு மூன்று நாள் பயணம் மேற்கொள்ளவுள்ளார்.

நாட்டின் 71 ஆண்டுகால நீண்ட வரலாற்றுப் பாரம்பரியம் கொண்ட கட்சியாக விளங்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியானது, ஆட்சியமைத்து அதிக தடவைகள் நாட்டை நிர்வகித்ததோடு அதிக ஜனாதிபதிகளை நாட்டுக்குத் தந்த சிறப்பு வாய்ந்த ஓர் தேசியக் கட்சியாகும்.

நாட்டு மக்களின் அபிப்பிராயங்களை தனது கொள்கையாக கொண்டு பயணிக்கும் இக்கட்சி, கொள்கை மறுசீரமைப்புகளை மேற்கொள்வதற்குத் தீர்மானித்துள்ளது. அதனடிப்படையில் வடக்கு மக்களது ☞2

## வறிய மக்களுக்காக போராடத் தயாராம்

வறுமை நிலையிலுள்ள மக்களுக்காக போராடுவதற்கு தயாராக இருப்பதாக எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

வீரவில கிரிதிஓயா ஒன்றிணைந்த விவசாயிகள் அமைப்பின் விவசாய தலைவர்களுடனான நேற்றைய சந்திப்பின் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

குடும்ப ரீதியில் வரவு - செலவுகளை மதிப்பீடு செய்து அஸ்வெசும நலன்புரி திட்டத்தில் பயனாளர்களை உள்வாங்குவதற்கு இந்த ஆட்சி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஒவ்வொரு குடும்பத்திலும் வரவு - செலவினை மதிப்பிடாமல் எவ்வாறு அஸ்வெசும ☞2

## வழக்குத் தாக்கல்

தேசிய கடன் மறுசீரமைப்பின்போது ஊழிர்சேமஇலாப நிதியத்திற்கு பாதிப்புகள் ஏற்படாதிருப்பதை உறுதி செய்வதற்கான உயர்நீதிமன்ற இடைக்கால உத்தரவைக் கோரி தேசிய மக்கள் சக்தி அடிப்படை உரிமை மீறல் மனுவொன்றை தாக்கல் செய்துள்ளது.

அக்கட்சியின் நிறைவேற் ☞2

## சஜித், ஹர்ஷவுடன் ஜனாதிபதி தொலைபேசியில் அவசர பேச்சு

பிரான்ஸுக்கான உத்தியோகபூர்வ பயணத்தை முடித்துக்கொண்டு திரும்பி உள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவசரமாக எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா ஆகியோருடன் தொலைபேசியில் பேச்சு நடத்தியுள்ளார்.

உத்தேச தேசிய கடன் மறுசீரமைப்புச் செயற்பாடுகள் தொடர்பில்தான் முன்னெடுக்கவுள்ள நடவடிக்கைகளை அவர் வெளிப்படுத்தினார். அதற்கான ஆதரவினை வழங்குமாறு கோரினார் என்று தெரிவிக்கப்படுகின்றது.. ☞2

# 1985க்கு முன்பான வனங்களின் வரைபடம் தயாரிக்க அனுமதி

### நேற்று வழங்கியது அமைச்சரவை

ந.லோகதயாளன்.

வனவளத் திணைக்களம் மற்றும் வன ஜீவராசிகள் திணைக்களம் என்பவற்றின் ஆளுகையில் கீழ் 1985 ஆம் ஆண்டிற்கு முன்பிருந்த நிலங்கள் குறித்த வரைபடம் தயாரிக்க நேற்றைய அமைச்சரவைக் கூட்டத்தில் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி முன்வைத்த அமைச்சரவைப் பத்திரத்திற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியது.

போர்காரணமாக வடக்கு, கிழக்கு ஆகிய மாகாணங்களிலும் அதனை அண்டிய மாவட்டங்களிலும் பலர் நீண்ட காலமாக மக்கள் இடம்பெயர்ந்து வாழ வேண்டியிருந்ததால் வளர்ந்த மரங்கள் காணப்பட்ட பகுதிகளும் வனப்பகுதிகளாகவும் வன உயிரினங்களின் பகுதியாகவும் வர்த்தமான மூலம் அறிவிக்கப்பட்டுள்ளன. இவ்வாறு அறிவிக்கப்பட்ட மக்களின் காணிகளை எதிர்வரும் 6 மாதகாலத்திற்குள் பகுதி பகுதியாக விடுவிக்கும் நோக்கில் விரைவில் அப்பகுதிகளை இனம்காணும் ஏற்பாடாக வரைபடம் தயாரிக்கப்படுவுள்ளது என்று அந்த அமைச்சரவைப் பத்திரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கட்சித் தலைவர்கள் கூட்டம் ஒத்திவைப்பு

நாடாளுமன்றக் கட்சித் தலைவர்கள் கூட்டம் இன்று நடைபெறவிருந்த நிலையில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை வரையில் அது ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தவார இறுதியில் நாடாளுமன்ற சிறப்பு அமர்வுகளை நடத்துவதற்கு ஆட்சியாளர்கள் திட்டமிட்டுள்ள நிலையிலேயே இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளதாக நாடாளுமன்றத் தகவல்கள் தெரிவிக்கின்றன. ☞2

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒழிப்பு நடவடிக்கைகள் படையினரின் துணையுடன் நடக்க இருப்பதால் யாரையும் வீடுகளை விட்டு வெளியேறவேண்டாம் என்ற அறிவிப்பு, திங்கட்கிழமை வங்கிகளுக்கு விசேட விடுமுறை என்று ஒரு போருக்கான தயார்ப்படுத்தல்களோடுரணில்முன்னேறி வருகின்றார்.எனவேபெரிதாக ஏதோஒருஆப்புஇருக்கின்றது என்பது மட்டும் திண்ணம்.

உள்நாட்டுக் கடனை மறுசீரமைப்புச்செய்யாமல் வெளிநாட்டுக் கடன்களை மறுசீரமைக்க முடியாது ஏன்கிற இக்கட்டுக்குள்சிக்கிக்கொண்டுள்ளரணில்,எந்தவிலை கொடுத்தாவது உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பை மேற்கொள்வார். அப்போது நாட்டில் குழப்பங்கள் ஏற்பட்டு, பழையபடி மே 9 கிளர்ச்சி போன்ற அசம்பாவிதங்கள் ஏற்பட்டுவிடாமல்இருப்பதை உறுதிப்படுத்தவே அவர் இவ்வாறு தயாராகி வருகின்றார்.

இந்த நிலைமைகளால் பங்குச் சந்தையில் ஏற்படக்கூடிய மிகப்பெரிய சரிவைத் தடுக்கும் வகையில் இலங்கைப்பங்குச்சந்தைவெள்ளிக்கிழமை தனது வர்த்தகத்தை மூடிவிடத்தீர்மானித்துள்ளது. எனவே வார இறுதியில் தரமான சம்பவங்களை எதிர்பார்த்திருக்கலாம் என்று மட்டும் தெரிகின்றது.

...........................

நயினாமடுவில் சீனித் தொழிற்சாலை ஒன்று தாய்லாந்தில் பதிவு செய்யப்பட்ட சீன முதலீட்டாளர்களின் நிறுவனத்தின் மூலம் நிறுவப்படுவதற்கான திட்டம் ஒன்று ஜனாதிபதி தலைமையில் முன்னெடுக்கப்படுகின்றதுஎன்றசெய்தியை காலைக்கதிர்தான் முதன் முதலில் அம்பலப்படுத்தியது. இதற்காகப் பல்லாயிரக்கணக்கான ஏக்கல் நிலத்தை வழங்க ஜனாதிபதி பிரதேச செயலர்களுக்கு உத்தரவிட்டுள்ளார் என்றதகவலையும் வாசகர்ளுக்குத் தெரிவித்திருந்ததுநினைவிருக்கலாம்.

இந்தத் திட்டத்துடன் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் தலைமைப் பங்காளியான ரெலோ கட்சிக்குள்ள தொடர்பு குறித்தும் தொடர்ச்சியாக வெளிப்படுத்தி வந்திருக்கின்றோம். இந்தச் சீனித் தொழிற்சாலைக்கு நிலம்வழங்குவதுதொடர்பாக நடந்த சூம் கூட்டத்தில் அந்தக் கட்சீயின் பேச்சாளர் சுரேன் குருசாமியும் கலந்துகொண்டிருந்தார்என்பதையும் வெளிப்படுத்தியிருந்தோம்.

சீனாவின் பின்னணியைக் கொண்ட இந்தத் திட்டத்தில் ரெலோவின் பங்களிப்புக் குறித்து இந்தியா அதிருப்தி அடைந்திருக்கின்றது என்பதையும், இந்த விடயத்தில் பயணம் மற்றும் மதுபான நிலையங்களுக்கான அனுமதி போன்றனவும் புகுந்து விளையாடி உள்ளன என்பதையும் கூட அவ்வப்போது சுட்டிக்காட்டியிருக்கின்றோம்.

இப்போது அவையெல்லாம் வெளிச்சத்துக்குவந்துவிட்டன. நேற்றைய அமைச்சரவைக் கூட்டத்தில் இந்தத் திட்டத்திற்கு ஜனாதிபதியால் நகர்த்தப்பட்டது. அதற்கு அமைச்சரவையின்அனுமதி வழங்கப்பட்டது என்றே அறிக்கையிடப்படும் என்று தெரிகின்றது. நாங்கள் அறிக்கையிட்டதிலும்பார்க்க அதிகமான அளவு நிலத்தை சீனித் தொழிற்சாலையின் தேவைக்காக வழங்க வேண்டும்என்று ஜனாதிபதி முனமொழிந்திருக்கிறார்.

வடக்குமாகாணம்தண்ணீர்ப் பற்றாக்குறையுள்ள இடம். அதிலும்வவுனியாமாவட்டம் குடிதண்ணீருக்குப்பெரிதும் தட்டுப்பாடு நிலவும் பகுதி. இங்கு நிலத்தடி நீரை அருந்துபவர்கள் சிறுநீரக நோயினால் அதிகம் பாதிக்கப்படுகிறார்கள் என்கிற பொதுவானகருத்து உண்டு. அப்படிப்பட்ட இடத்தில் அதிக தண்ணீர் தேவைப்படும் கரும்புப் பயிர்ச் செய்கையை ஊக்குவிப்பது தற்கொலைக்கு ஒப்பானது. இந்தப் பிரதேசத்தை மேலும்வறண்ட நிலமாக்கிப் பாலைவனமாக்கிவிடும்.

இந்தக் காரணத்தாலேயே வடக்குமாகாணஅமைச்சராக ஐங்கரநேசன் இருந்தபோது வவுனியாவில் கரும்புச் செய்கைக்காகக் கோரப்பட்ட அனுமதியை வழங்க மறுத்திருந்தார்.

இத்தகையதிட்டங்கள்மூலம் கரும்புச் செய்கை என்கிற போர்வையில் சிங்களக் குடியேற்றங்கள் இங்கு ஊக்குவிக்கப்படும் என்று ஜனநாயகக் கூட்டணியில் உள்ள ஈபிஆர்எல்எவ் அமைப்பின் தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன் அறிக்கை ஒன்றின் மூலம் சுட்டிகாட்டியிருந்தார். இப்போது அவரது கூட்டணியில் உள்ள ஒரு கட்சியின் ஆசீர்வாதம், அனுசரணையோடு திட்டம் நடைமுறைக்குவரப்போகின்றது. என்ன செய்யப்போகின்றார்கள் ஜனநாயகக் கூட்டணியின் ஏனைய தலைவர்கள்? வழக்கம் போல கழுவுகிற மீனில் நழுவுவார்களா? இல்லை ரெலோவுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பார்களா?

இடிமின்னல்
(idiminnal23@gmail.com)

## லிட்ரோ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இறுதியாக 12.5 கிலோ கிராம் சமையல் எரிவாயு சிலிண்டர் 452 ரூபாவால் குறைக்கப்பட்டு 3,186ரூபாவிற்கு விற்பனை செய்யப்படுகிறது.

அதேபோல், 5 கிலோகிராம் சமையல் எரிவாயு சிலி ண்டர் 181ரூபாவால் குறைக்கப்பட்டு 1281ரூபாவாக விற்பனையாகிறது.

அத்துடன் 2.3 கிலோ கிராம் சமையல் எரிவாயு சிலிண்டரின்விலை 83ரூபாவால் குறைக்கப்பட்டு 598 ரூபாவிற்கு விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

இந்நிலையில், மீண்டும் எரிவாயுசிலிண்டரின்விலை குறைவடைய உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கட்சித் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எவ்வாறாயினும், இந்தச் செய்தி இறுதி செய்யப்படும் வரையில்நாடாளுமன்றத்தின் நாட்காட்டியில் விசேட அமர்வுக்கான உத்தியோகபூர்வமான அறிவிப்புக்கள் எதுவும்விடுக்கப்படவில்லை.

எனினும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தவார இறுதியில் கடன் மறுசீரம்பு முன்மொழிவை நாடாளுமன்றத்தின் அனுமதியுடன்நிறைவேற்றவுள்ளார் என்று தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தென்னக்கோனை ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேன்முறையீட்டுநீதிமன்றம் நிராகரித்தது.

குறித்த சம்பவம் தொடர்பானவிசாரணையில் சட்டமா அதிபர் நேரடியாக ஆஜராகியிருந்த நிலையில் அவர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தன்னை பிரதிவாதியாக இணைத்துக் கொள்ள வேண்டும் என்று குறிப்படவில்லையென தேசபந்து தென்னக்கோன் மேன்முறையீட்டு நீதிமன்றில் சமர்ப்பித்த எழுத்தாணை மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்நிலையில் குறித்த மனுவினை விசாரணைக்கு எடுத்துக்கொண்டமேன்முறையிட்டு நீதிபதிகளான நிஷங்க மற்றும் மரிக்கார் ஆகியோரைக் கொண்ட அமர்வு, சட்டமா அதிபர் தனது அதிகாரத்தினை மீறிச்செயற்பட்டுள்ளார் எனவும், அடிப்படைகளின்றியே விசாரணைக்கான கடிதத்தினை அனுப்பியுள்ளார் எனவும் சுட்டிக்காட்டி அக்கோரிக்கையை நிராகரி;த்துள்ளது.

இதேவேளை, அலரிமாளிகை முற்றுகையின்போது 17.8மில்லியன் ரூபா பணம் தொடர்பில் தேசபந்து தென்னக்கோனை சந்தேக நபராகபெயரிடுமாறுகொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவையும் செல்லுபடியற்றதாக அறிவிப்பதாகவும் மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

## தேசிய ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழிகளைப்பயன்படுத்தாமல் கடன்உரிமையாளர்களுடன் இணக்கப்பாடொன்றை ஏற்படுத்திக்கொள்ளாமல் கடன் மறுசீரமைப்பை ஆட்சியாளர்கள் ஒருதலைப்பட்சமாகத் தீர்மானித்து அதனைப் பலாத்காரமாக வங்கி மற்றும் ஒய்வூதிய நிதியங்கள் மீது சுமத்த முயற்சிப்பதை நாங்கள் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை. ஆட்சியாளர்களின் இந்த நடவடிக்கையை நாங்கள் எதிர்க்கிறோம்.

மேலும் வங்கிகள் இந்த ஆட்சிக்குக் கடன் வழங்குவது நம்பிக்கை அடிப்படையிலாகும். பணம் இல்லாவிட்டால்பணம்அச்சிட்டாவது கடனை செலுத்தும் என்ற நம்பிக்கை வங்கிகளுக்கு இருக்கின்றன. நாட்டில் இருக்கும் 5 வங்கிகளின் மொத்த வருமானத்தில் 25 சதவீதம் அரசுக்குக் கடனாகவே வழங்கப்பட்டிருக்கிறது. அவ்வாறான நிலையில் வங்கிகளுடன் கலந்துரையாடாமல்தன்னிச்சையாகசெயற்பட முடியுமா?. அவ்வாறு செயற்படுவதை அரச பயங்கரவாதமாகவே நாங்கள் பார்க்கிறோம்.

அதேநேரம் ஊழியர் சேமலாப நிதியத்தில் 80 வீதம் அரசுக்குக் கடனாக வழங்கப்பட்டு இருப்பதாக எமக்குஉத்தியோகபூர்வமற்ற வகையில் தகவல் கிடைத்திருக்கிறது.எனவேதேசியகடன் மறுசீரமைப்பு மேற்கொள்வதாக இருந்தால் நாடாளுமன்றம், வங்கிகள் மற்றும் கடன்உரிமையாளர்களுடன் கலந்துரையாடி மாத்திரமே மாத்திரமே இதனைச் செய்ய முடியும். மாறாக ஆட்சியாளர்கள் நினைத்த பிரகாரம் செய்ய முடியாது - என்றார்.

## நயினாமடு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாவட்டத்தில் உள்ள அரச நிலங்கள் அனைத்தும் இந்தத் திட்டத்துக்காக வழங்கப்படுவதோடுஅதன்அருகில் உள்ள மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களில் இருந்தும் இந்தத் திட்டத்திற்காகஅரசுகாணிகளைக்கையளிக்கவேண்டியிருக்கும்என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

நேற்றைய அமைச்சரவைக் கூட்டத்தில் திடீரென இந்தத் திட்டம் தொடர்பாகஜனாதிபதி முன்மொழிந்தார். அதற்கான அனுமதியை வழங்கும்படி அமைச்சர்களிடம்கேட்கப்பட்டபோது, அது தொடர்பில் இன்னும் படித்துப் பார்க்கவில்லை என்று அமைச்சர்கள் தெரிவிக்க முற்பட்டபோது, அதில் அப்படி கருத்தூன்றிப் படிப்பதற்கு ஒன்றுமில்லை என்றுபடி ஜனாதிபதி அந்த விடயத்தைக்கடந்துசென்றார் என்று கூறப்படுகின்றது. அதனால் இந்தத் திட்டத்திற்கு அமைச்சரவை அனுமதி வழங்கப்பட்ட மாதிரித்தான் என்று அமைச்சர்கள் சிலர் காலைக்கதிர்பத்திரிகையிடம் தெரிவித்தனர்.

## தாய்லாந்து ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை -தாய்லாந்து சுதந்திர வர்த்தக உடன்படிக்கை தொடர்பான ஐந்தாவது சுற்றுப் பேச்சு நாளை புதன்கிழமை வரை நடைபெறவுள்ளது.

உலகளாவிய பொருளாதாரத்துடன்இணைவதற்கான இலங்கையின் நோக்கத்தை தாய்லாந்து பிரதிநிதிகளுக்கு விளக்கிய வீரசிங்க, பிராந்திய விரிவான பொருளாதார பங்காளித்துவத்தில் அங்கம் வகிப்பதற்காக, இலங்கையின் பொருளாதார பிரவேசத்தை முதலில் தெற்காசியாவிலும் பின்னர் அதை கிழக்கு நோக்கியும் விரிவுபடுத்தும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் எதிர்பார்ப்பை தாய்லாந்து தூதுக்குழுவிடம் விளக்கினார்.

பிராந்திய விரிவான பொருளாதார பங்காளித்துவத்திற்கானசெயலகமாகவும் செயல்படும் ஆசியான் செயலகத்தின் செயலாளர் நாயகம் மற்றும் சிரேஷ்ட அதிகாரிகளுடன்இலங்கைஏற்கனவே இதுகுறித்துஆராய்ந்துள்ளது. ஆசியான் மற்றும் பிராந்திய விரிவான பொருளாதாரம் பங்காளித்துவம் ஆகிய இரு துறைகளிலும் தாய்லாந்தின் தீவிர பங்களிப்பைக்கருத்தில் கொண்டு,பிராந்தியவிரிவான பொருளாதார பங்காளித்துவத்தில் இணைவதற்கு இலங்கை தாய்லாந்தின் ஆதரவைஎதிர்பார்ப்பதாகவும் வீரசிங்க கூறினார்.

தாய்லாந்தின் வர்த்தக பேச்சுவார்த்தைகள்திணைக்களத்தின்பணிப்பாளர்நாயகம் அவுரமன் சுப்தாவிதும் மெய்நிகர்தொழில்நுட்பத்தின் ஊடாக பங்குபற்றியதோடு, இலங்கைக்கான தாய்லாந்து தூதுவர் போஜ் ஹர்ன்பொல் உள்ளிட்ட தாய்லாந்து பிரதிநிதிகளும், சர்வதேச ஊடகத்துறை தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ஷேனுகா செனவிரத்ன , ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிகசெயலாளர் சாந்தனி விஜயவர்தன, பிரதி பிரதான பேச்சுவார்த்தையாளர் ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் எஸ்.டபிள்யூ.சி. ஜயமினி உள்ளிட்ட இலங்கை பிரதிநிதிகள் கலந்துரையாடலில்கலந்துகொண்டனர்.

## மூன்று ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அபிலாசைகளைஉள்ளடக்கி பயணிக்க வேண்டியதன் அடிப்படையில் யாழ், கிளிநொச்சி மாவட்டத்தின் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி நாடாளுமன்றஉறுப்பினரும், நாடாளுமன்றக்குழுக்களின் பிரதித் தவிசாளருமான அங்கஜன் இராமநாதனது அழைப்பின் பேரில் மைத்திரிபால சிறிசேன யாழ்ப்பாணத்துக்கான மூன்று பயணத்தை மேற்கொள்கிறார் என்று அந்தக் கட்சி அறிவித்துள்ளது.

இந்தப் பயணம் ஜூன் 29 தொடங்கி ஜூலை 1வரை தொடரும்.

சமகாலத்தில் எமது மக்கள் எதிர்கொண்டுள்ள பிரச்சனைகள் தொடர்பிலும், நீண்ட காலமாக தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினைகள் தொடர்பிலும் பல்வேறுபட்ட தரப்பினரை மைத்திரிபால சிறிசேன அவர்கள் இந்தப் பயணத்தின்போது சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார். வடக்குக் கடலுக்குச் சென்று இந்திய மீனவர்கள் எவ்வளவு தூரம் வந்து தொழில் செய்கீறார்கள் என்பதையும்கூடப் பார்க்க இருக்கிறாராம்.

## வறிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திட்டத்துக்கு பயனாளர்கள் தெரிவு செய்யப்பட்டனர்? லோர்ன் ஏசியா என்ற நிறுவனத்தால் முன்னெடுக்கப்பட்ட ஆய்வில் இலங்கையில் 14 சதவீதமாகக் காணப்பட்ட வறுமைநிலை 31சதவீதமாக உயர்வடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அதற்கேற்ப நாட்டில் 70 இலட்சம் மக்கள் வறுமை நிலையிலுள்ளனர்.

எவ்விதபேதமும் இன்றி வறுமை நிலையிலுள்ளவர்களை தேர்ந்தெடுத்து , இந்த வேலைத்திட்டத்தை இந்த ஆட்சி நடைமுறைப்படுத்தியிருக்க வேண்டும். அவ்வாறு செய்யாததன் காரணமாகவே மக்கள் வீதிக்கிறங்கி போராட்டங்களில் ஈடுபட்டுள்ளனர். வரவு - செலவுகளை மதிப்பீடு செய்து இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு நாம் வலியுறுத்துகின்றோம்.

வறுமைநிலையிலுள்ள பலரும்அஸ்வெசுமதிட்டத்தில் உள்வாங்கப்படவில்லை. அவர்களுக்காக போராடுவதற்கு நாம் தயாராகவுள்ளோம். அதேபோன்று இடைநிறுத்தப்பட்டுள்ள திரிபோஷா வழங்கும் திட்டத்தையும் இந்த ஆட்சி விரைவில் ஆரம்பிக்க வேண்டும். மக்கள்உயிர்வாழ்வதற்கான உரிமையை அரசாங்கம் உறுதிப்படுத்த வேண்டும் - என்றார்.

## வழக்குத் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றுக்குழு உறுப்பினரும் சட்டத்தரணியுமான சுனில் வட்டகல, வசந்த சமரசிங்க உள்ளிட்டவர்கள் குறித்த மனுவை நேற்றையதினம் உயர்நீதிமன்றில் தாக்கல் செய்தனர்..

இதன் பின்னர் சட்டத்தரணி சுனில் வட்டகல செய்தியாளர்களிடம்தெரிவித்ததாவது:

அரச துறையாக இருக்கலாம், தனியார் துறையாக இருக்கலாம்ஊழியர்களுக்கு மிகவும் முக்கியமான விடயமாக இருப்பது ஊழியர் சேமலாப நிதியாகும். அவர்களின் ஒட்டுமொத்தமான உழைப்பின் சேமிப்பு அதுவாகும். அதனைப் பாதுகாக்கவேண்டியது அவசியமாகும்.

அத்துடன் இந்த ஆட்சி தேசியகடன்மறுசீரமைப்பின் ஊடாக ஊழியர் சேமஇலாப நிதியில் கைவைப்பதானது அடிப்படை உரிமை மீறலாகும். அதனைஏற்றுக்கொள்ள முடியாது. குறிப்பாக அரசமைப்பின் 14.1 ஜி பிரிவினை மீறும் செயற்பாடாகவே அது அமையும். ஆகவே உயர்நீதிமன்றம்அதுகுறித்த இடைக்கால உத்தரவினைப் பிறப்பிக்குமாறு கோருவதே எமது நிலைப்பாடாகும் -என்றார்.

## சஜித், ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதியுடனான பேச்சு தொடர்பில் ஹர்ஷ டி சில்வா தெரிவித்ததாவது:

ஜனாதிபதியினுடைய அணுகுமுறையானது திருப்திகரமானதாக இல்லை. ஜனாதிபதிஎதிர்க்கட்சித்தலைவருடன் மட்டும் இந்த விடயத்தினைக் கலந்துரையாடக்கூடாது என்பதே எனது நிலைப்பாடாகும்.

எதிர்க்கட்சியில் உள்ள அனைவரையும்அழைத்துப் பேச்சு நடத்துவதன் ஊடாக எதிர்க்கட்சித்தலைவரையும் இணக்கப்பாட்டுக்குகொண்டு வரவேண்டும். அதில்வெளிப்படைத்தன்மை பேணப்பட வேண்டும் - என்றார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு
தொலைபேசி இலக்கம்
076 443 80 22



காலைக்கதிர் Kalaikkathir

# முறையான தேசிய கடன் மறுசீரமைப்பு குறித்த பரந்துபட்ட பேச்சுக்குத் தயார்

## ஹர்ஷ டி சில்வா தெரிவிப்பு



தேசிய கடன் மறுசீரமைப்பு குறித்த யோசனைகளை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றிக் கொள்வதற்கு அரசாங்கத்துக்கு எதிர்க்கட்சிகளின் ஆதரவு அவசியமாகும்.

எனவே முறையான தேசிய கடன் மறுசீரமைப்பு குறித்த பரந்துபட்ட பேச்சுக்கு நாம் தயார் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

ஊழியர் சேமலாப நிதியத்துக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் தேசிய கடன் மறுசீரமைப்பை மேற்கொள்ளும் முறைமை தொடர்பான வேலைத்திட்டம் தம்வசம் காணப்படுவதாக தெரிவித்த அவர் அதற்கமைய கடன் மறுசீரமைப்பை மேற்கொண்டால் குறுகிய காலத்துக்குள் நாட்டைக் கட்டியெழுப்ப முடியும் என்றும் குறிப்பிட்டார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் -

தேசிய கடன் மறுசீரமைப்பு தொடர்பாக யோசனைகளை இதுவரையில் நாம் பார்க்கவில்லை. ஆனால் இதனை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றிக் கொள்வதற்கு எமது ஒத்துழைப்பு அரசாங்கத்துக்கு நிச்சயம் தேவை. தேசிய கடன் மறுசீரமைப்பு குறித்த வேலைத்திட்டங்கள் தொடர்பில் திருப்தியடைந்தால் மாத்திரமே எம்மால் அதற்கு ஒத்துழைப்பு வழங்க முடியும்.

நாம் இது தொடர்பில் ஆழமாக மதிப்பாய்வு செய்து பல மாற்று திட்டங்களை முன்வைத்துள்ளோம். ஊழியர் சேமலாப நிதியத்தில் கைவைக்காது தேசிய கடன் மறுசீரமைப்பை மேற்கொள்வது எவ்வாறு என்பதை நாம் அறிவோம். எனவே இவ்விடயம் தொடர்பில் பரந்துபட்ட பேச்சுகளை முன்னெடுப்போம்.

தேசிய கடன் மறுசீரமைப்பு குறித்த யோசனைகள் சாதாரண மக்களுக்கு எதிர்மறையானதாகக் காணப்பட்டால், அவற்றில் திருத்தங்களை மேற்கொள்வதற்கு எமக்கு மக்கள் சார்பில் முன்னிற்க வேண்டியேற்படும். காரணம் எதிர்க்கட்சியின் பிரதான கடமை மக்களுக்காக முன்னிற்பதாகும். இதிலிருந்து தப்பிச் செல்ல நாம் எண்ணவில்லை.

ஊழியர் சேமலாப நிதியத்துக்காகவும் , நிலையானபணவைப்பாளர்களுக்காகவும் , சாதாரண மக்களுக்காகவும் நாம் போராடுவோம். உண்மையில் தேசிய கடன் மறுசீரமைப்பை முறையாக நடைமுறைப்படுத்தினால் சிறு மற்றும் நடுத்தர தொழிற்துறையினரை பாதுகாக்க முடியும். எதிர்க்கட்சியிலிருந்து கொண்டு இதனை சரியான பாதையில் எம்மால் கொண்டு செல்ல முடியும். அத்தோடு இதனை சரியான முறையில் முன்னெடுத்துச் சென்றால் குறுகிய காலத்துக்குள் நாட்டைக் கட்டியெழுப்பவும் முடியும். - என்றார். (05)

# நாட்டின் ஒருமைப்பாட்டைப் பாதுகாக்க ராஜபக்ஷாக்களால் மட்டுமே முடியுமாம்!

## சபதமிடுகிறார் சாகர

ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் உத்தியோகபூர்வ அறிவிப்பு வெளியானதும் எமது ஜனாதிபதி வேட்பாளரை நாட்டு மக்களுக்கு பகிரங்கப்படுத்துவோம்.

நாட்டின் ஒருமைப்பாட்டை ராஜபக்ஷர்களால் மாத்திரமே பாதுகாக்க முடியும் என பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

கலாவெள பகுதியில் இடம்பெற்ற பொதுஜன பெரமுனவின் தொகுதி அமைப்பாளர் கூட்டத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு -

பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண்பதற்காகவே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாகத் தெரிவு செய்தோம். கட்சியின் உள்ளக விவகாரங்களில் ஜனாதிபதி தலையிடுவதில்லை, நாங்களும் ஐக்கிய தேசியக் கட்சிகளின் அரசியல் செயற்பாடுகளில் தலையிடுவதுமில்லை.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கம் வீழ்ச்சியடைவதற்கு பல்வேறு காரணிகள் செல்வாக்கு செலுத்துகின்றன.

பொருளாதாரமா அல்லது மக்களின் சுகாதாரமா என்ற கேள்வி எழுந்த போது பொதுஜன பெரமுன அரசாங்கம் நாட்டு மக்களின் உயிரை பாதுகாக்க முன்னுரிமை வழங்கியது.

கொவிட் பெருந்தொற்று தாக்கத்தைக் கட்டுப்படுத்த அரசாங்கம் எடுத்த நடவடிக்கைகளை பெரும் பாலானோர் மறந்து விட்டனர்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் யார் என பல்வேறு தரப்பினர் கேள்வி எழுப்புகிறார்கள்.


ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் உத்தியோகபூர்வ அறிவிப்பு வெளியானதும் எமது ஜனாதிபதி வேட்பாளரை அறிவிப்போம். ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் ஆளும் தரப்பின் உறுப்பினர்கள் குறிப்பிடும் கருத்து அவர்களின் தனிப்பட்ட நிலைப்பாடே தவிர கட்சியின் நிலைப்பாடல்ல,

நாட்டின் ஒருமைப்பாட்டைப் பாதுகாக்க ராஜபக்ஷர்கள் அளப்பரிய சேவையாற்றியுள்ளார் கள்.

ராஜபக்ஷர்களால் மாத்திரமே நாட்டின் ஒருமைப்பாட்டை பாதுகாக்க முடியும். எதிர்வரும் காலங்களில் இடம்பெறவுள்ள தேர்தல்களில் மக்கள் ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்தை நிச்சயம் தோற்றுவிப்பார்கள். - என்றார். (05)

# ஜனாதிபதியின் பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்த தகவல்கள் கசிந்தது எவ்வாறு?

## விசாரணைக்கும் உத்தரவு



ஜனாதிபதிக்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்த பொலிஸ் உள்ளக தகவல்கள் கசிந்துள்ளமை குறித்து விசாரணைகளை ஆரம்பிக்குமாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சி.ஐ.டியினருக்கு உத்தரவிட்டுள்ளார்.

படுகொலை முயற்சி இடம்பெறலாம் என்ற சந்தேகத்தின் பேரில் ஜனாதிபதிக்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளன என பல சமூக ஊடகங்களில் தகவல்கள் வெளியாகியுள்ள நிலையில் பொலிஸ் உள்ளக தகவல்கள் எவ்வாறு கசிந்தன என்பது குறித்து விசாரணைகளை மேற்கொள்ளுமாறு சிஐடியினருக்கு உத்தரவிட்டுள்ள பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் இதற்கு காரணமானவர்களைக் கைதுசெய்யுமாறும் அறிவுறுத்தியுள்ளார்.

தி மோர்னிங் ஆங்கிலப் பத்திரிகை இதனை தெரிவித்துள்ளது.

ஜனாதிபதியோ அல்லது பிரதமரோ வெளி நாட்டிற்கு சுற்றுப்பயணம் மேற்கொள்ளும்போதும் அவர்கள் நாடு திரும்பும்போதும் விசேடமான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்படுவது வழமை என தெரிவித்துள்ள பெயர் குறிப்பிட விரும்பாத பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சக அதிகாரியொருவர் ஜனாதிபதி தனது வெளிநாட்டு பயணத்தை பூர்த்திசெய்துகொண்டு நாடு திரும்புகின்ற போதும் அதே நடைமுறை பின்பற்றப்படுவதாக தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி வெளிநாட்டு விஜயங்களை மேற்கொள்ளும்போதோ நாட்டிற்கு திரும்பும்போதோ உரிய அதிகாரிகளிற்கு அறிவுறுத்தல் வழங்கப்படுவது வழமை என குறிப்பிட்டுள்ள அந்த அதிகாரி பொலிஸாருக்கு வழங்கப்படும் அவ்வாறான அறிவுறுத்தல்களை ஊடகங்களிற்கோ அல்லது தனிநபர்களிற்கோ அனுமதியின்றி வழங்ககூடாது எனவும் தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக சமூக ஊடகங்களில் பெரும் சர்ச்சை ஏற்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார். தகவல்களை கசியவிட்டவர்கள் பரப்பியவர்கள் குறித்து விசாரணைகளை மேற்கொண்டு அவர்களை கைதுசெய்யுமாறு சிஐடியினர் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். (05)

# வெளிநாட்டுத் தலைவர்கள் ரணில்முன் குரலை அடக்கியே பேசுகின்றார்களாம்

## புகழ்ந்து தள்ளுகிறார் வஜிர அபேவர்தன



அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடுகள் மிகவும் பெரிய நாடுகளாகும். எனினும், அந்த நாடுகளை விட பெரிய உதாரணபுருஷரே எமது நாட்டை ஆட்சி செய்கிறார் என்பதை நினைத்து நாட்டு மக்கள் பெருமையடைய வேண்டும்.

எமது தலைவரின் குரலுக்கு மேல் பேசக்கூடிய தலைவர்கள் இல்லை. அவர் இந்த உலகிலுள்ள பல மிக்க தலைவர் என ஐக்கிய தேசிய கட்சியின் தவிசாளரும், நாடளுமன்ற உறுப்பினருமான வஜிர அபேவர்தன தெரிவித்தார்.

காலி, கரந்தெனிய பகுதியில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில் -

நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சிக்கு 55 ஆசனங்களும், ஐக்கிய தேசிய கட்சிக்கு ஓர் ஆசனமும் உள்ளது.

தற்போது ஐக்கிய தேசிய கட்சிக்கு நாடாளுமன்றத்தில் ஓர் ஆசனம் மாத்திரமே உள்ளது என நினைக்கிறீர்களா? இல்லை. தலைவர் உருவாகியிருந்தார். அதனை எனக்கு பார்ப்பதற்கு மாத்திரமே இருந்தது.

அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடுகள் மிகவும் பெரிய நாடுகள். இருப்பினும், அந்த நாடுகளை விட பெரிய உதாரண புருரே எமது நாட்டை ஆட்சி செய்கிறார் என்பதை நினைத்து நாட்டு மக்கள் பெருமையடைய வேண்டும்.

அந்த நாடுகளை விட பெரியவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க என்பதை நான் உங்களுக்கு நினைவுபடுத்துகிறேன்.

கனடாவின் தலைவர் எமது ஜனாதிபதியின் அருகில் அமரும் போது அவர் பேசுகிறாரா? இல்லை.

பிரான்ஸ் ஜனாதிபதி பேசுவதை நான் பார்த்தேன். எமது தலைவரின் குரலுக்கு மேல் பேசக்கூடிய தலைவர்கள் இல்லை. அவர் இந்த உலகிலுள்ள பலமிக்க தலைவர்.

இது சிறிய நாடு. ஊடகங்களை அடக்குவதாக, சட்டங்களை கொண்டு வருவதாக கூறுகிறார்கள். சிங்கபூரின் ஊடக அதிகாரசபை சட்டமூலத்தை நான் படித்தேன்.

அது மிகவும் பெறுமதியானது. அதனையே கொண்டு வரவேண்டும். இதனிடையே பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தை கொண்டு வரவுள்ளதாக கூறுகிறார்கள். அதனை கொண்டு வர வேண்டும். உலகில் ஏனைய நாடுகளுக்கு சிறந்தது என்றால் ஏன் இலங்கைக்கு சிறந்ததல்ல. என்றார். (05)

# கிடைத்த வாய்ப்பை சஜித் பயன்படுத்த தவறிவிட்டார்

## குமார வெல்கம குற்றச்சாட்டு

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு மக்களாணை இல்லையென்றால் மக்களாணை உள்ள, சிறந்த ஒருவரை அரசியல் தரப்பினர் முன்வைத்தால் முழுமையான ஒத்துழைப்பு வழங்குவோம். கிடைத்த வாய்ப்பை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ பயன்படுத்திக் கொள்ளவில்லை என நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தெரிவித்தார்.

பத்தரமுல்லை பகுதியில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

ராஜபக்ஷர்களின் தவறான பொருளாதார முகாமைத்துவத்தால் நாடு பாரிய பொருளாதார பாதிப்பை எதிர்கொண்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கடுமையான தீர்மானங்களால் நாடு சற்று இயல்பு நிலைக்கு திரும்பியுள்ளது என்பதை அரசியல் நோக்கத்துக்கு அப்பாற்பட்ட வகையில் ஏற்றுக்கொள்ள வேண்டும். நாடு என்ற ரீதியில் வங்குரோத்து அடைந்துள்ள நிலையில் அரசியல் நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு செயற்பட முடியாது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு மக்களாணை இல்லை என்று குறிப்பிடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. மக்களின் கடும் எதிர்ப்பைத் தொடர்ந்து கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகியதன் பின்னர் நாடாளுமன்றத்தின் ஊடாக இடைக்கால ஜனாதிபதி தெரிவு இடம்பெற்றது.

ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிட்ட அனுரகுமார திஸாநாயக்க, டலஸ் அழகபெரும ஆகியோர் வெற்றிபெறவில்லை. 134 மக்களாணையுடன் ரணில் விக்கிரமசிங்க வெற்றிபெற்றார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு மக்களாணை கிடையாது என எதிர்க்கட்சிகள் குறிப்பிடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

ஜனாதிபதிக்கு மக்களாணை இல்லை என்றால் மக்களாணை உள்ள, சிறந்த ஒருவரை அரசியல் தரப்பினர் முன்வைத்தால் அதற்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்குவோம். நெருக்கடியான சூழலில் கிடைத்த வாய்ப்பை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ பயன்படுத்திக் கொள்ளவில்லை.

நெருக்கடியான சூழலில் அரசாங்கத்தை ஏற்க அவர் முன்வரவில்லை. அரசமைப்பின் பிரகாரம் 2024 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தல் இடம்பெறும் வரை ஜனாதிபதி பதவியில் எவ்வித மாற்றமும் ஏற்படாது. – என்றார் (05)

# கொழும்பில் முப்படையினர் ஒத்துழைப்புடன் விசேட தூய்மைப்படுத்தல் வேலைத் திட்டம்

## சீதா அரம்பேபொல அறிவிப்பு



டெங்கு நோய் காரணமாக இவ்வாண்டில் இதுவரையான காலப்பகுதியில் மாத்திரம் 200 மரணங்கள் பதிவாகியுள்ளன.

கொழும்பு மாவட்டத்தில் அதிக அபாயம் மிக்க வலயமாக இனங்காணப்பட்டுள்ளமையால் முப்படையினரின் ஒத்துழைப்புடன் இவ்வாரம் கொழும்பில் சுற்றுச்சூழல் தூய்மைப்படுத்தும் வேலைத் திட்டம் நடைமுறைப்படுத்தப் படவுள்ளதாக சுகாதார இராஜாங்க அமைச்சர் சீதா அரம்பேபொல தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடகமையத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் -

இவ்வாண்டில் இதுவரையான காலப்பகுதியில் 200 டெங்கு மரணங்கள் பதிவாகியுள்ளன. 2017 - 2019 இற்கு இடைப்பட்ட காலத்தில் பதிவானதை விட அதிகளவான டெங்கு நோயாளர்கள் சுமார் 6 மாத காலப்பகுதியில் இனங்காணப்பட்டுள்ளனர்.

இவ்வாறு டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை தீவிரமாக அதிகரித்து வருகின்றமையைக் கட்டுப்படுத்துவதற்காகவே விசேட அமைச்சரவை உப குழு நியமிக்கப்பட்டது.

தற்போது அந்தக் குழுவால் நாடளாவிய ரீதியில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

காலநிலை மாற்றத்துக்கேற்ப ஜூன் மற்றும் ஜூலை மாதங்களில் டெங்கு நோய் பரவும் வீதம் சடுதியாக அதிகரிக்கும். இந்நிலைமையைக் கட்டுபடுத்துவதற்காக 9 மாகாணங்களிலும் 9 டெங்கு ஒழிப்பு உபகுழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.

ஒட்டு மொத்த டெங்கு நோயாளர்களில் 50 சதவீதமானோர் மேல் மாகாணத்தை சேர்ந்தவர்களாவர். குறிப்பாக மேல் மாகாணத்தில் கொழும்பு மற்றும் கம்பஹா ஆகிய மாவட்டங்களே அதிக அபாயமுடைய மாவட்டங்களாகவுள்ளன.

இவை தவிர மத்திய , தென், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் அடுத்தடுத்த கட்டங்களில் உள்ளன. டெங்கு நோய் பரவல் தீவிரமடைவதற்கு தொடர்ந்தும் இடமளிக்கப்படக் கூடாது என்பதற்காக இவ்வாரம் விசேட வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்த தீர்மானிக்கப்பட்டு;ள்ளது.

அதற்கமைய இவ்வார இறுதியில் முப்படையினரின் ஒத்துழைப்புடன் கொழும்பில் விசேட டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன. கொழும்பு மாவட்டத்திலுள்ள சகல சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுகளின் ஊடாக இது தொடர்பில் மக்களுக்கு அறிவித்தல் வழங்கப்படும். இது தவிர, கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களில் விசேட பரிசோதனைகளும் முன்னெடுக்கப்படவுள்ளன. டெங்கு நோய் மாத்திரமின்றி சகல மருத்துவ தேவைகளிலும் வைத்தியர்கள் பற்றாக்குறை தாக்கம் செலுத்தும். எனவே நாட்டில் நிலவும் விசேட வைத்திய நிபுணர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கு சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்லவால் நடவடிக்கை எடுக்கப்படும். டெங்கு நோய் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால் குழந்தைகள் மற்றும் சிறுவர்களின் மரணங்களை தடுக்க முடியாத நிலைமை ஏற்படும். எனவே, பாடசாலைகளிலும் அவற்றை அண்மித்த பகுதிகளிலும் விசேட டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும். - என்றார். (05)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com


## சந்தேகத்தை அதிகரிக்கும் ஆளும் தரப்பின் செயல்பாடு

உள்நாட்டுக் கடன்களை மறுசீரமைக்கும் செயற்றிட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. இந்த வாரம் அல்லது அடுத்த வாரமாவது இந்தத் திட்டம் நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்படவுள்ள நிலையில், அதற்காக ஆளும் தரப்பு எடுத்துவரும் நகர்வுகள் அச்சத்தை ஏற்படுத்துவனவாகவே இருக்கின்றன.

உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் மூலம் வங்கிகள் பாதிக்கப்படமாட்டா என்று ஆட்சியாளர்களும் மத்திய வங்கியின் ஆளுநரும் திரும்பத் திரும்பச் சொல்லி வந்தாலும், அந்தத் திட்டத்தை முன்னெடுக்கும்போது வங்கிகளுக்கு திடீரென விடுமுறை அறிவித்திருக்கும் அரசின் நடவடிக்கை சந்தேகத்தையே கிளப்புகின்றது. கடன்மறுசீரமைப்பு நடவடிக்கைகள் குறித்த எதிர்ப்பு நடவடிக்கைகளில் வங்கிகள் ஈடுபடுவதைத் தவிர்ப்பதற்காகவே ஆட்சியாளர்கள் இந்தத் திடீர் விடுமுறையை அறிவித்துள்ளார்கள் என்று சந்தேகப்படுவதற்கான நியாயமான காரணங்கள் தாராளமாக உண்டு. அப்படியிருந்தால் உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பு வங்கி நடவடிக்கைகளுக்குப் பாதிப்பாகவே அமையும் என்று எடுத்துக்கொள்ள முடியும்.

வங்கிகள் தமது இதுவரைகால இலாபத்தில் 25 சதவீதத்தை ஆட்சியாளர்களுக்குக் கடனாக வழங்கியுள்ளன என்று பிவித்துரு கெல உறுமய கட்சித் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்பன்பில தெரிவிக்கின்றார். இந்தத் தொகை அரசிடமிருந்து திரும்பக் கிடைக்காது என்கிற அபாய நிலையை வங்கிகள் எதிர்கொண்டால் அது பெரும் பாதிப்பாக மாறக்கூடும். அரசு வங்கிகளிடம் மட்டுமல்ல ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் என்பவற்றில் இருந்தும் 80 சதவீதமான பணத்தைக் கடனாகப் பெற்றுள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டுகின்றார். கடன் மறுசீரமைப்புத் திட்டத்தின் கீழ், அந்தப் பணமோ அல்லது அதில் பகுதியளவு பணமே திரும்பி வராது என்கிற நிலை ஏற்பட்டால் அதுவும் ஊழியர்களுக்குப் பெரும் பாதிப்பாக அமையும்.

ஆட்சியாளர்கள் என்ன செய்யப்போகிறார்கள் என்பது வெளிப்படைத்தன்மையோடு இல்லாத நிலையில், சந்தேகங்களும் வதந்திகளும் அச்சத்தை ஏற்படுத்துவதைத் தவிர்க்க முடியாது. பன்னாட்டுச் செலாவணி நிதியத்தின் (ஐஎம்எவ்) ஒப்பந்தம் போன்றே கடன் மறுசீரமைப்பையும் மூடிமந்திரமாகவே ஆளும் தரப்பு வைத்திருப்பது அது பற்றிய சந்தேகங்களை அதிகரிக்கின்றது.

தேசிய கடன்மறுசீரமைப்பு விடயத்தினை எதற்காக திருட்டுத்தனமாக முன்னெடுப்பதற்கு இந்த ஆட்சி முனைகின்றது என்று ஐக்கிய மக்கள் சக்தி கேள்வி எழுப்பியுள்ளது அக்கட்சியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்துமபண்டார இந்தக் கேள்வியை எழுப்பியுள்ளார்.

ஆட்சியாளர்கள் அவசர அவசரமாக தேசிய கடன் மறுசீரமைப்புஅறிவிப்பைவிடுத்துள்ளார்கள். ஆனால், தேசிய கடன்மறுசீரமைப்பு நடவடிக்கையில் உள்ள விடயங்கள் பகிரங்கமாக வெளியிடப்படவில்லை.

அனைத்தையும் இருட்டடிப்புச் செய்து அவசரமாக மறுசீரமைப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளமைக்கானகாரணம்என்ன? ஆட்சியாளர்கள் ஏன் இவ்வாறு திருட்டுத்தனமான செயற்பாடுகளை முன்னெடுகின்றார்கள்? என்று அவர் கேள்வி எழுப்புகின்றார். அதில் நியாயம் உண்டு. அரசுக்கு இது தொடர்பில் எதிர்க் கட்சிகளுடனும் நாட்டு மக்களுடனும் கலந்துரையாடல்களை நடத்துவதற்குப் போதிய கால அவகாசம் இருந்தது. அப்படியிருந்தும் அது திடீரென இந்தக் கலந்துரையாடல்களை அவசரமாக நடத்தி ஒரு முடிவுக்கு வர முயற்சிப்பது சந்தேகத்தையே அதிகரிக்கின்றது. இது நாட்டுக்கு நல்லதல்ல.

# இலக்கியத்தில் இணைந்த பனை

அங்கம் – 2



மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்
மெல்பேண், ஆஸ்திரேலியா.

படையை வெல்லும் பனை என்று எங்கள் இலக்கியங்கள் வியந்து நிற்கின்றன. என்ன ! .... படையை வெல்லும் பனையா அப் படி இந்த பனையில் என்னதான் இருக்கிறது என்று எண்ணத் தோன்றுகிறது அல்லவா? பனையை புசித்தோர் படையை வெல் லும் ஆற்றல் பெற்றவராவார் என்று சங்கப்பாடல் காட்டி நிற்கிறது. பழம்பெரும் காவியங்கள் பனைதான் கற்பகதரு என்கிறது. அதாவது அமிர்தம். அமிர்தத்தைஉண்டவர்களுக்குஇறப்பே இல்லைஎன்பதுஎல்லோருக்கும்தெரியும். இவ்பூவுலகில்இறப்பேஇல்லைஎன்பதன் பொருள் மரணத்தை காலம் தாழ்த்தி தருவிப்பதையே குறிக்கும்.பனையின் அணை ப்பில் வாழ்ந்த காரணத்தால் மரணம் கூட சற்று தள்ளியே நிற்கும். இதனால் படையினையே வெல்லும் நிலை வரும் என்பதைக் குறியீடாக உணர்த்தவேபடையைவெல்லும்பனை என்னும்மொழிஉருவாகியது எனலாம். பனைக்கு அணை (அணைமரம்) என்ற பெயரும் உண்டு.பல கன எடையுள்ள தண் ணீரை அணை தடுத்து நிறுத்தும் ஆற்றல்பெற்றது.அதே போல் பனையை தன் வாழ்வில் துணையாக கொண்டு வாழும் மனிதனும் உறுதியானவனாக திகழ்வான் என்பதுதான் பனையால் படை வெல்லும் என்பதற்கு சான்றாய் தெரிகிறது எனலாம்.

பனைக்கு பெண்ணை, கூந்தல், காமம், உபதாகம், ஐந்தார், ஐந்தாலம், கரும்புரம் ,கரும்புல், பகற்பலி, புற்றாலி புற்பதி, போந்து, திருணராசன், துராரோகம், திருவிராசன், குவீரம், தாளம், தருவிராசன், புல்லூதிகம், புற்பதி, என பல பெயர்கள் இருக்கின்றன. பனைக்கு இவ்வாறு பல பெயர்கள் இருப்பதுபோல்-



பனையில் ஆண் பனை, பெண்பனை, கூந்தப்பனை, தாளிப்பனை, குமுதிப்பனை, சாற்றுப்பனை, ஈச்சம்பனை, ஈழப்பனை சீமைப்பனை, ஆதம்பனை திப்பிலிப்பனை, உடலற்பனை , கிச்சிலிப்பனை குடைப்பனை, இளம்பனை, கூறைப்பனை, இடுக்குப்பனை , தாதம்பனை, காந்தம் பனை, பாக்குப்பனை, ஈரம்பனை, சீனப்பனை, குண்டுப்பனை ,அலாம் பனை, கொண்டைப்பனை, ஏரிலைப்பனை, ஏசறுப்பனை, காட்டுப் பனை, கதலிப்பனை, வலிய ப்பனை வாதப்பனை,அலகுப்பனை, நிலப்பனை, சனம்பனை - எனப் பல வகைகள் இருக்கின்றன என் பதையும் கருத்திருத்தல் அவசியமாகும்.

பூமியிலேகற்பகதருஎன்றுவியந்து நிற்கும் பனைபற்றி எண்ணுகின்ற வேளை பனையுடன் எங்களின் இலக்கியங்கள், புரா ணங்கள், திருமுறைகள்,



தொடர்பு பட்டிருப்பதும் அவைகளினால் குறிப்பிடப்படுவதும் கருத்திருத்த வேண்டியதே. பஞ்சத்தைத் தாங் கக் கூடியதான மரமாகவே பனையினைச் சிவன்படைத்தார்என்றுதலபுராணங்கள் வியந்துநிற்பதும்நோக்கத்தக்கதே.ஞானிகளாலும்அறிஞர்களாலும்போற்றப்படும் வகையில் எங்களின் கற்பகதருவான பனை விளங்கியிருக்கிறது என்பது மகிழ்வான செய்தியாக இருக்கிறது அல்லவா!

சூரபதுமன் பனைக்கொடியினைத் தாங்கி வந்தான் என்று கந்தபு ராணம் காட்டுகிறது.கம்பனது இராமா யணமும் பனையினைப் பற்றி பாலகாண்டப் பகுதியில் காட்டுகிறது.பலராமர், வீஷ்மர் ஆகியோர் பனைக் கொடியினை வைத்திருந்தார்கள் என்றும் அறியமுடிகிறது. திருமுருகாற்றுப்படையும் பனையினைக் காட்டுகிறது. நற்றிணையில் பனையினைப் பரதவர் தெய்வ மாக வழிபட்டார்கள் என்று காட்டுவதும் கருத்திருத்த வேண்டியதே ! தேம்படு பனையின் திரள் பழத் தொரு விதை என்று ஔவையாரும் பனையினைக் காட்டி நிற்கிறார்.திருஞானசம்பந்தப் பெருமான் ஆண் பனைகளைப் பெண்பனை ஆக்கினார் என்பதை திருமு றைகள் வாயிலாக அறிகின்றோம். சம்பந்தப் பெருமானது காலத்தில் பனந்தோப்புகள் தனித் தோட்டங்களாக இருந்திருக் கின்றன. சிவன் அடியார்கள் பனைவளம் பெருக்குவதிலும் பெருதும் ஈடுபட்டிருந்தார்கள் என்றும் அறியமுடிகிறது. தத்துவத்தையும்உலகியலையும் ஞானத்தால் பார்த்தவர் திருமூலர் என்னும்ஞானி. அவரும்பனையினைக் குறிப்பிட்டுதத்துவம்உரைப்பதும்கருத்திருத்த வேண்டியதே !

**ஆறு தெருவில் அகப்பட்ட சந்தியிற்**
**சாறு படுவன நான்கு பனையுள**
**ஏறற் கரியதோர் ஏணியிட் டப்பனை**
**ஏறலுற்றேன்கடல்ஏழுங்கண்டேனே**

இப்பாடலில் பனையின் பெயர் இடம் பெறுகிறது. ஆனால் அதனைத் தத்துவம் உரைப்பதற்கு திருமூலர் என்னும் ஞானி கையாழுவதுதான் குறிப்பிடத்தக்க தாகும்.பாடலின் கருத்தை அறிய ஆவலுடன் இருப்பீர்கள்! கருத்தையும்காண்போம்பனையையும் காண்போம் ! ’ ஆறு ஆதாரங்களாகிய தெருவின் கீழுள்ள மூலாதாரமாகிய சந்தியில், பக்குவமடையாதபோது இருள் முகமாகத் தொழிற்படுவன ஆகிய நான்கு இதழ்களாகிய பனைகள் உள்ளன. ஏறுவதற்கு அருமையான சுழுமுனையாகிய ஏணியை வைத்து அப் பனை மரத்தின் மேலேறி சகஸ்ரதளஞ் சென்றேன். ஆதாரமாகிய ஏழுகடலும் ஒன்றாகி ஒளிமயமாகக் பொங்குவதைக் கண்டேன். (பனை-பனைமரம்போன்ற முதுகத் தண்டு) காஞ்சிபுரத்திலிருந்து தென்மேற்கேஇருபத்தெட்டுகிலோமீற்றர் தொலைவில் வந்தவாசி செல்லுகின்ற வழியில் திருவோத்தூர் என்னும் தலம் இருக்கிறது. இத்தலத்தின் தலவிருட்சமாய் இருப்பது கற்பகதரு வான பனையாகும். சம்பந்தப் பெருமானால் பாடப்பட்ட தலமாகும். இத்தலத்தைவிட - திருப்பனந்தாள், திருப்ப னையூர், திருவன்பார்த்தான் பனங்காட்டூர் (திருப்பனங்காடு), புறவர்பனங்காட்டூர் ஆகியவையும்பனையினைத்தலவிருட்சமாய் கொண்டிருக்கின்றன என்று அறியக்கிடக்கிறது.

திருவோத்தூர் தலத்தை வலம் வருகின்ற வேளை வடக்குப் பகுதியில் தலமாரமாகிய பனை ஓங்கி வளர்ந்திருப்பதைக் காணலாம். இந்தத் திருவோத்தூரில் இருந்த சிவன் அடியார் ஒருவர் - சிவனுக்காகவே பனைகளை வளர்த்து வந்தார்.அப் பனைகளோ ஆண்பனைகளாகி காய்க்காது இருந்தன. இந்த அன்பர் காலம் சமணம் சைவத்தை எதிர்த்து நின்ற காலப் பகுதியாகும். சைவரான சிவனடியாரைச் உமது ஆண் பனையினை உங்கள் சிவன் பெண் பனை ஆக்குவாரா என்று சமணர்கள் கேலி செய்தபடியே இருந்தனர். அடியாரும் கவலையில் மூழ்கியே இருந்தார். சம்பந்தப் பெருமான் இத்தலத்துக்கு வருகைதந்த வேளை அடியார் தமது மனக்கவலையினை வெளியிடுகிறார். சம்பந்தப் பெருமான் இறைவனைப் பிரார்த்தித்து

பூத்தேர்ந்து ஆயன கொண்டு நின் பொன்னடி என்று தொடங்கும் பதிகத்தைப் பாடி நிறைவில்

**குரும்பை ஆண்பனை ஈன்குலை**
**ஓத்தூர்அரும்புகொன்றைஅடிகளை**
**பெரும்பு கலியுள் ஞானசம்பந்**
**தன்சொல் விரும்புவார்வினை வீடே**

என்று பாடியவுடன் நெருங்கும் ஏற்றப் பனையெல்லாம் நிறைந்த குலைகளாய்க் குரும்பை அரும்பு பெண்ணை ஆகின என்று சேக்கிழார் வாக்கால் அறியக் கிடக்கின்றது. அரும்பு பெண்ணைஆகிஇடக்கண்டோர்எல்லாம் அதிசயித்தார் என்னும் சேக்கிழார் வார்த்தை மனமிருத்த வேண்டியதே !

மணிவாசகப் பெருமானும் பனையின் அழகினை கண்ணார்ந்த பெண்ணை என்றுதிருக்கோவையாரில் தொட்டுக் காட்டுகிறார்.

**தினையளவு போதாச் சிறுபுன்னீர்**
**நீண்டபனையளவுகாட்டும்படித்தால்**
**- மனையழகு வள்ளைக் குறங்கும்**
**வளநாட வள்ளுவனார்**
**வெள்ளைக் குறட்பா**

என்னும் பாடலில் திருக்குறள் பனைபற்றிக் கூறும் செய்தி காட்டப்படுகிறது. பெண்ணை தாலம் புல் தாளி போந்தை என்று எண்ணிய நாமம் பனையென இசைப்பர் என்று திவாகரம் காட்டுவதும் நோக்கத்தக்கது.

சைவநாயன்மார் பனைபற்றிப் பாடியதுபோல்வைணவ அடியார்களான ஆழ்வார்களும் பாடியிருக்கும் செய்தியையும் காணக்கூடியதாய் இருக்கிறது.

**திருமழிசைப் பிரான்**
**திருச்சந்த விருத்தமாய்**
**கரண்டம் ஆடு பொய்கையுள் கரும்**
**பனைப் பெரும் பழம் புரண்டு வீழ**
**வாளைபாய்குறுங்குழிநெடுந்தகாய்**
**திரண்ட தோள் இரணியன் சினங்**
**கொளாகம்ஒன்றையும்இரண்டுகூறு**
**செய்து உகந்த சிங்கம்**
**என்பது உன்னையே**

(8ஆம் பக்கம் பார்க்க)


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 390/=
Chikne Fried Rice with Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 80/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swahpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# வடக்கு, கிழக்கில் தற்போது மெளன யுத்தம் நடக்கிறது!

## கோவிந்தன் கருணாகரன் சுட்டிக்காட்டு

இந்த நாட்டில் தமிழ் மக்களின் விகிதாசாரத்தை குறைக்கவேண்டும் திட்டமிட்டு 1949 ஆம் ஆண்டு, முதல் பிரதமரான டி.எஸ்.சேனநாயக்கா கிழக்கு மாகாணத்திலேகல்லோயாகுடியேற்றத்தை ஆரம்பித்து வைத்த காலம் தொடக்கம் இன்று வரை தமிழ் மக்களின் காணிகள் அபகரித்து விகாரைகள் அமைக்கும் திட்டங்களை ஆட்சியாளர்கள் செய்து வருகின்றனர். வடக்கு கிழக்கில் தற்போது நடந்து கொண்டிருப்பது ஒரு மெளன யுத்தம் என நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் பத்மநாபா உள்ளிட்ட தியாகிகளின் 33 ஆவது நினைவு அஞ்சலி சனிக்கிழமை அனுஷ்டிக்கப்பட்டது.

இதில் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்திய பின்னர் உரையாற்றுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்திலே பல நாள்கள் தமிழ் மக்களால் மறக்க முடியாத வடுக்கள் நிறைந்த நாளாக இருக்கின்றன.

அந்த நாள்களின் ஒரு நாளாகவே 19 ஜூன் 1990 ஆம் ஆண்டு விடுதலைப் போராட்ட பாதையிலே ஒரு கறுப்பு புள்ளி விழுந்த நாளாகும்.

தமிழ் மக்கள் ஆயுத போராட்டத்தை விரும்பி ஏற்றுக் கொண்டவர்கள் அல்லர். ஆயுதப் போராட்டம் எங்கள் மீது திணிக்கப்பட்டது. இலங்கை சுதந்திரம் அடைந்த நாளில் இருந்து நாங்கள் தமிழினம் இரண்டாம் தர பிரஜைகளாக இந்த நாட்டிலே அழைக்கப்பட்டோம்.

இவ்வாறு தனி சிங்களசட்டம் கொண்டுவரப்பட்டதில் இருந்து தமிழர்களுக்கு எதிராக அரங்கேற்றப்பட்ட 1957, 1958, 1978 போன்ற கலவரங்களைத் தொடர்ந்து மிகவும் மோசமாக 83 கலவரத்தை உருவாக்கி கப்பல் மூலம் வடக்கு, கிழக்கிற்கு சொந்த நாட்டிலே அகதிகளை அனுப்பிய வரலாறு ஆகும்.

இவ்வாறு தமிழர்கள் மீது நடந்தேறிய இனழிப்பிற்கு எதிராக அஹிம்சை மூலமாகப் போராடிய எமது தலைவர்கள் அதில் நம்பிக்கையிழந்து உரிமைகளை வென்றெடுப்பதற்காக நாங்கள் ஆயுத போராட்டத்துக்குள் தள்ளப்பட்டோம். அதனால் 1969 ஆயுத போராட்டம் முதல் முதல் தமிழீழ விடுதலை இயக்கம் அதில் பிரபாகரன் உட்பட போராட்டத்தின் ஆரம்ப கர்த்தாக்கள் இருந்தார்கள்.

இந்த நிலையில் 83 கலவரத்தை அடுத்து ஈழவிடுதலை போராட்டம் ஒரு வித்தியாசமான பாதைக்குள் சென்றது. முன்னணியில் 5 போராட்ட இயக்கங்கள் இருந்தன. அப்போது அனைவரும் ஒன்றிணைந்து போராடினால் தான் எமது இலக்கை அடையமுடியும் என 1984 ஆம் ஆண்டு ஈழ தேசிய விடுதலை முன்னணி என்று ஈரோஸ், ரொலே, ஈபிஆர்எல்எப். என மூன்றும் ரி.என்.எல்.எப். உருவாகியது பின்னர் விடுதலைப் புலிகளும் அதில் இணைந்தனர் என்பது வரலாறுகள்.

ஆனால் விடுதலைப் புலிகள் மாத்திரம் வடக்கு, கிழக்கிலே இந்த போராட்ட பாதையில் நின்று இருந்தாலும் 2009 மே 18 உடன் இந்த ஆயத போராட்டம் முற்று முழுதாக மௌனிக்கப்பட்டது. இந்த போரட்டம் மௌனிக்கப்படும் முன்னர் பல தலைவர்களை இழந்திருக்கின்றோம். அதில் போரட்ட தலைவர்கள் மாத்திரமல்லர் மிதவாத கட்சியான தழிழர் விடுதலைக் கூட்டணி, தமிழரசு கட்சி போன்றவற்றின் தலைவர்கள் அமிர்தலிங்கம் உட்பட பல தலைவர்களை இழந்திருக்கின்றோம்.

ஜே,ஆர். ஜெயவர்த்தனா காலத்திலே சமாதானப்பேச்சுக்கே இடமில்லாமல் தமிழ் மக்களின் குரல்வலையை நசுக்கினர.; 2009 வரை தமிழ் மக்களை வஞ்சித்துக் கொண்ட அரசு ஆயுத போராட்டம் மௌ னிக்கப்பட்டதன் பின்பு வடக்கு, கிழக்கில் வித்தியாசமான ஒரு திணிப்பை செய்துவருகின்றது.

அதுதான் தமிழர் தேசத்தில் விகாரைகள் அமைக்கவேண்டும், தமிழரின் குடிபரம்பலை எவ்வளவு வேகமாக மாற்றி அமைக்கவேண்டும். இணைந்திருந்த வடக்கு, கிழக்கை வெலிஓயா குடியேற்றம் மூலம் நில தொடர்பற்ற மாகாணங்களாக இரண்டு மாகாணங்களையும் பிரிப்பது போன்ற நடவடிக்கையைத் திட்டமிட்டு செய்துவருகின்றது

தற்போதைய எதிர்கட்சி தலைவாரான சஜித் நல்லாட்சி காலத்தில் புத்தசாசன அமைச்சராக இருந்தபோது வடக்கு, கிழக்கில் ஆயிரம் விகாரை அமைக்கவேண்டும் என்ற அவர் தற்போது இலங்கையிலே ஆயிரம் தாது கோபுரங்களை படிப்படியாக அமைக்கவேண்டும் எனக் கூறியுள்ளார்.

ஆகவே தற்போது வடக்கு, கிழக்கில் நடந்து கொண்டிருப்பது ஒரு மௌன யுத்தம். தமிழ் மக்களின் காணிகள் அபகரிப்பு, தமிழர் பிரதேசங்கள் எங்கும் விகாரைகள் குறிபாக உயர்ந்த மலைகளில் அமைப்பது, சுற்றுலா பயணிகள் கூட இலங்கை ஒரு பௌத்த நாடு என்பதை பறைசாற்றுவதற்காக இந்த திட்டங்களை செய்து வருகின்றனர்.

குருந்தூர் மலையிலே பூர்வீகமாக தமிழ் மக்கள் வாழ்ந்த காணிகள் இன்று தொல்பொருள் என்ற பெயரில் அபகரிக்கப்பட்டுள்ளது. சரத்வீரசேகர, உதயகம்மன்பில, விமல்வீரன்ஸ போன்ற அரசியல்வாதிகள் தங்களது நிகழ்ச்சி நிழலுக்குள் செயலாற்றிக்கொண்டு வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தமிழர் தாயகம் என தம்பட்டம் அடிக்கும் தமிழர்களுக்கு எச்சரிக்கை விடுப்பதாக சரத்வீரசேகர தெரிவித்தார்.

எனவே தமிழர்களுடைய தாகம் விடுதலை நோக்கம் இன்னும் தணியவில்லை என அமைச்சருக்கு தெரிய வேண்டும். அதேவேளை கோட்டாபயவின் விசுவாசியான புதிதாக தேசியபட்டியல் மூலமாக நாடாளுமன்றம் வந்த வெளிநாட்டு அமைச்சர் ஒரே இரவில் தீர்வை கொடுக்கமுடியாது. கிடைப்பதை பெற்றுக் கொள்ளவேண்டும் எனத் தெரிவித்துள்ளார். எனவே இனப்பிரச்சினை தோன்றி எத்தனை ஆண்டுகள் என அவருக்கு தெரியாமல் இருக்கலாம், ஒரே இரவில் இந்தப் பிரச்சினைக்கான தீர்வைக் கேட்கவில்லை.

நாடு சுதந்திரமடைந்த காலம் இருந்தே தமிழர்கள் இனப்பிரச்சினையை தீர்ப்பதற்காக தொடர்ச்சியாக பேச்சில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றோம். தந்தை செல்வா பேச்சு, பண்டா செல்வா ஒப்பந்தம், டட்லி செல்வா ஒப்பந்தம் மற்றும் திம்பு பேச்சு, 2001 பேச்சு, 2009 பின் மஹிந்தவுடன் 18 சுற்று பேச்சு. உட்பட தற்போதும் தொடர்ந்து பேச்சு நடந்து கொண்டுதான் இருக்கின்றது.

தற்போதைய ஜனாதிபதி ஒரு சர்வதேச அழுத்தத்தின் மத்தியிலே இந்த நாட்டை நடத்துகின்றார். 1987 இலங்கை இந்திய ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது. அதன் மூலம் உருவாகிய குறைமாத குழந்தையான மாகாணசபைமுறைமைஏற்படுத்தப்பட்டது. இந்த 13 ஆம் திருத்த சட்டத்தை முற்று முழுதாக தமிழ் மக்களின் இனப் பிரச்சனைக்கான தீர்வாக யாரும் ஏற்றுக் கொள்ள வில்லை,

ஆனால் அரசியல் அதிகாரத்தில் ஆசையற்ற பத்மநாபா, கிடைப்பதை எற்றுக் கொண்டு அதிலிருந்து நாங்கள் முன்னேறிச் செல்வோம் என்ற அடிப்படையில் அந்த மாகாணசபை அதிகாரத்தை பெற்றுக் கொண்ட முதல் தலைவர் ஆவார். அதிகாரத்தில் ஆசையில்லாத காரணத்தால் முதலமைச்சர் பதவியை ஏற்றுக் கொள்ள



வில்லை. அப்படிப்பட்ட ஒரு தலைவரது ஞாபகார்த்த தினம்தான் இந்த 19 ஜூன் என்பது.

எனவே நாங்கள் கிடைப்பதை பெற்றுக் கொண்டு எங்கள் மக்களுக்கு துரோகம் செய்வதற்கு நாங்கள் அரசியல் செய்யவில்லை. தமிழ்த் தேசிக்ய கூட்டடைப்பு விடுதலைப் புலிகள் இயங்கு நிலையில் இருந்த காலத்திலே 2001 உருவாக்கப்பட்டது. அப்போது கடந்த கால கசப்பான சம்பவங்களை மறந்து தமிழ் மக்களுக்கு ஒரு பலமான அரசியல் சக்தி இருக்கவேண்டு என்ற காரணத்துக்காக இந்த கூட்டமைப்பை உருவாக்கினோம்.

2009 ஆம் ஆண்டு வரை தமிழ் தேசியத்தேசியக்கூட்டமைப்பு அசைக்கமுடியத சக்த்தியாக இருந்தது. 2004 தமிழர் விடுதலை கூட்டணி வெளியேறியது. 2010 அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் வெளியேறியது. 2015 ஈபிஆர்எல்எப் வெளியேறியது அதேபோன்று 2023 தமிழரசு கட்சி வெளியேறியுள்ளது ஆனால் தற்போது தமிழ்த் தேசிய கூட்டமைப்பு ஒரு பலமான 5 கட்சிகள் கொண்ட அணியாக செயற்படுகின்றோம். - என்றார். (05)

---

# நீர் வழங்கல் மற்றும் சுகாதார மேம்பாட்டு திட்டத்தின் ஊடாக உலக வங்கியின் நிதி உதவியில் அபிவிருத்தி!

## பாரத் அருள்சாமி கூறுகிறார்





நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட் கட்டமைப்பு அமைச்சர் ஜீவன் தொண்டமானின் வழிகாட்டலின் ஊடாக பெருந்தோட்ட மனித வள அபிவிருத்தி நிதியம் மற்றும் நீர் வழங்கல் மற்றும் சுகாதார மேம்பாட்டு திட்டத்தின் ஊடாக உலக வங்கியின் நிதி உதவியில் பல திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன என அமைச்சின் பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் தலைவர் பாரத் அருள்சாமி தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில் -

நுவரெலிய மாவட்டத்தில் 7,,758 பேர் உள்ளடங்கிய 2,288 வீடுகளுக்கு 1,021 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் இவ்வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. கண்டி மாவட்டத்தில் மலையகத்தில் அதிக அளவிலான நிதி ஒதுக்கீட்டில் நடைபெறும் பிரம்மாண்டமான குடிநீர் திட்டம் புஸ்ஸல்லாவை நியூ பீகாக் தோட்டத்தில் இடம்பெற்று வருகிறது.

6,310 பயனாளர்கள் ஏறக்குறைய 1,840 குடும்பங்கள் பயன்பெறவுள்ள இந்தத் திட்டம் 453 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் நடைபெற்று வருகிறது.

இந்தத் திட்டத்தை நான் நேரடியாக பார்வையிட்டதுடன் இதனை துரிதகதியில் நிறைவு செய்து இப்பகுதியில் நெடுங்காலமாக காணப்படும் குடிநீர் பிரச்சினைக்கு தீர்வையும் பெற்றுக் கொடுக்க உள்ளேன்.

இது மாத்திரமன்றி பதுளை மாவட்டத்தில் 470 வீடுகளில் உள்ள 1,668 பயனாளர்கள் பயனடையும் வகையில் 146 மில்லியன் ரூபா செலவில் குடிநீர் திட்டமும் இரத்தினபுரி மாவட்டத்தில் 420 வீடுகளை சார்ந்த 1,624 பயனாளர்கள் பயனடையும் விதத்தில் 132 மில்லியன் நிதி ஒதுக்கீட்டில் குடிநீர் திட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

கொரோனா நோய் தொற்று மற்றும் பொருளாதார சிக்கல்கள் நாட்டின் நிலவிய போதிலும் கடந்த காலங்களில் 24 ஆயிரத்து 581 பயனாளர்கள் பயனடையும் வண்ணம் 5,239 வீடுகளுக்கு 789 மில்லியன் ரூபா செலவில் இந்நீர் திட்டங்கள் நுவரெலிய மாவட்டத்திலும் 863 பயனாளர்கள் பயனடையும் வண்ணம் 976 வீடுகளுக்கு 93 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் பதுளை மாவட்டத்திலும் வழங்கி வைக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது என பாரத் தெரிவித்தார்.

மேலும் நுவரெலிய மாவட்டத்தில் 4 மில்லியன் ரூபா நிதி ஒத்துக்கீட்டில் 1,500 இற்கும் அதிகமான மாணவர்கள் பயனடையும் விதத்தில் சுகாதார மேம்பாட்டு திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கழிவறைகள், பொதுக் குடிநீர் திட்டம் போன்றவை சுகாதாரம் மேம்பாட்டு திட்டத்தில் உள்ளடங்கும் முக்கிய அம்சங்கள் ஆகும். அத்தோடு 125.75 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் 12,575 பயனாளர்கள் பயனடையும் விதத்தில் தனியான கழிவறைகள் அமைக்கும் திட்டமும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இது மாத்திரமன்றி நுவரெலியா மாவட்டத்தில் 60 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் 551 தனி கழிப்பறைகளை அமைப்பதற்கான வேலை திட்டமும் இம்மாதம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அது மாத்திரமன்றி, இந்த வேலைத் திட்டங்களை பராமரிப்பதற்காக இளைஞர் யுவதிகளுக்கான விசேட பயிற்சி நெறி வழங்கப்பட்டு அவர்களை பெருந்தோட்ட நிர்வாகத்துடன் இணைந்து தொழில் நுட்பவியலாளராகவும் நியமனங்களை வழங்குவதற்கும் நாம் வேலை திட்டங்களை முன்னெடுத்துள்ளோம். அத்தோடு குடிநீர் பரிசோதிப்பு நிலையம் ஒன்றை நிதியத்தின் நுவரெலிய மாவட்ட பணிமனையிலும் ஆரம்பித்து வைத்துள்ளோம்.

எமது மக்களுக்கு தேவையான சுகாதார வசதிகளை பெற்றுக் கொடுப்பது எமது முதன்மை நோக்கமாகும். அந்த வகையில் அமைச்சர் ஜீவனின் வழிகாட்டலில் பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் தலைவராக பல நிலைப்பேண்தகு அபிவிருத்தி திட்டங்களை நாம் மேற்கொண்டு வருகின்றோம் என பாரத் அருள்சாமி தெரிவித்தார்.

(05)

---

# சட்டவிரோத துப்பாக்கிகள் மற்றும் கைக்குண்டுகள்; தகவல் வழங்குபவர்களுக்கு சன்மானம் அதிகரிப்பு

சட்ட விரோத துப்பாக்கிகள் மற்றும் கைக்குண்டுகளைதேடும்நடவடிக்கைகளுக்கு உதவும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் மற்றும் அது தொடர்பில் தகவல்களை பெற்றுத் தரும் தரப்பினருக்கு வழங்கப்படும் சன்மான தொகையைஅதிகரிக்கதீர்மானிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பொலிஸ் ஊடகப் பிரிவு விடுத்துள்ள விசேட அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு -

சட்ட விரோத துப்பாக்கிகள் மற்றும் கைக்குண்டுகள் புழக்கத்தில் இருப்பது, இந்த நாள்களில் பல குற்றச் செயல்களுக்கு முக்கிய காரணமாக இருப்பதால் தேடுதல் நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. பொது பாதுகாப்பு அமைச்சின் அறிவுறுத்தலின் படி, சட்ட விரோத துப்பாக்கிகள் மற்றும் கைக்குண்டுகளைதேடும்நடவடிக்கைகளுக்கு உதவும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் மற்றும் தனிநபர் தகவல் வழங்குநர்களுக்கு வழங்கப்படும் சன்மான தொகையை அதிகரிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில், ஞாயிற்றுக்கிழமை முதல் அடுத்த மாதம் 31 ஆம் திகதி வரை மேற்கொள்ளப்படவுள்ள சுற்றிவளைப்பின்போது கைப்பற்றப்படும் சட்ட விரோத துப்பாக்கிகள் மற்றும் கைக்குண்டுகளுக்கு வழங்கப்படும் வெகுமதித் தொகை அதிகரிக்கப்பட்டுள்ளது.

மேலும், ரி-56 துப்பாக்கியுடன் சந்தேக நபர் ஒருவர் கைதுசெய்யப்படும்போது பொலிஸ் உத்தியோகத்தர் மற்றும் தனிநபர் தகவல் வழங்குநருக்கு 2,50,000 ரூபாய் சன்மானம் வழங்கப்படவுள்ளது.

சந்தேக நபர் ஒருவர் இன்றி துப்பாக்கியை மாத்திரம் கைப்பற்றப்படும் சந்தர்ப்பத்தில் பொலிஸ் உத்தியோகத்தருக்கு 2 இலட்சம் ரூபாவும், தனிநபர் தகவல் வழங்குநருக்கு 2,50,000 ரூபாவும் வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேலும் இது தொடர்பில் பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான நிஹால் தல்துவ கருத்து தெரிவிக்கையில்,

நாம் நாட்டு மக்களிடத்தில் கோரிக்கையை முன்வைக்கிறோம். சட்ட விரோதமாக துப்பாக்கிகள் மற்றும் கைக்குண்டுகளை தம் வசம் வைத்திருப்பவர்கள் தொடர்பில் தகவல் கிடைக்கப்பெற்றால் உடனடியாக பொலிஸாருக்கு தெரியப்படுத்துங்கள்.

119 அல்லது 1997 எனும் அவசர பொலிஸ் தொலைபேசி இலக்கங்களுக்கு அழைத்து தகவல்களை வழங்க முடியும். வழங்கப்படும் தகவல்கள் இரகசியமாக பேணப்படும். மக்களால் வழங்கப்படும் இவ்வாறான ஒத்துழைப்புகள் நாட்டில் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படும் குற்றச்செயல்களை கட்டுப்படுத்துவதற்கு உதவும். - என்றார். (05)

---

# தப்பிச்சென்ற மரண தண்டனைக் கைதி அதிகாரிகளிடம் வசமாகச் சிக்கினார்



*வெலிக்கடை சிறைச்சாலையில் சிறைச்சாலை அதிகாரியின் சீருடைக்கு நிகரான சீருடையை அணிந்து கைதியொருவர் தப்பிச் சென்றபோது கைது செய்யப்பட்டுள்ளார்.*

*வெலிக்கடை சிறைச்சாலையில் மரண தண்டனை விதிக்கப்பட்ட கைதி ஒருவர் கடந்த சனிக்கிழமை மத நிகழ்வுக்காக சிறைச்சாலையில் இருந்து வெளியே அழைத்துச் செல்லப்பட்டபோது அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளார் என சிறைச்சாலைகள்திணைக்களம் தெரிவித்துள்ளது.*

*இதன்போது சந்தேகமடைந்த சிறைச்சாலை அதிகாரிகள் கைதியை துரத்திச் சென்று, மருதானை ரயில் நிலையத்தில் கைதி ரயிலில் ஏறும்போது கைதுசெய்து, வெலிக்கடை சிறைச்சாலைக்கு கொண்டு வந்துள்ளனர்.*

*42 வயதுடைய பண்ணல பிரதேசத்தை சேர்ந்த நபரே தப்பிச் செல்ல முயன்றபோது கைதுசெய்யப்பட்டுள்ளார்.*


*இவர் கொலைக் குற்றச்சாட்டின் கீழ் கடந்த 2015 ஆம் ஆண்டு கம்பஹா மேல் நீதிமன்றத்தால் மரண தண்டனை விதிக்கப்பட்ட கைதி எனத் தெரிவிக்கப்படுகிறது.*

*இந்தச் சம்பவம் தொடர்பில் சிறைச்சாலை அத்தியட்சகரின் தலைமையில் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன என சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. (05)*

காலைக்கதிர் Kalaikkathir

# கதிர்காமக் கந்தன் ஆலயத்தில் கொத்துப்பந்தல் புதுப்பித்தல் சடங்கு

## யானைகள் கொண்டு நடத்தப்பட்டது




(வி.ரி. சகாதேவராஜா)

வரலாற்று பிரசித்தி பெற்ற கதிர்காம கந்தன் ஆலய கொத்துப்பந்தல் புதுப்பிக்கும் சடங்கு வழமை போல் யானைகளால் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இச் சடங்கு கதிர்காமக் கந்தன் திரு விழாவின் ஆறாம் நாள் சடங்காக பண்டுதொட்டு நடைபெற்று வருகிறது.

முருகன்ஆலயத்தின்கொத்துப்பந்தலை மரக்கிளைகளால் அன்றைய தினம் புதுப்பிக்கப்படும். காட்டிலிருந்துவெட்டப்பட்ட மரக்கிளைகளை, வாசனாஹஸ்திராஜய்யா தலைமையிலான யானை வர்க்கம் சுமந்துவந்து, மரக்கிளைகளை மாணிக்க கங்கையில் கழுவும்.

கதிர்காம பஸ்நாயக்க நிலமே டிசான் குணசேகர சகிதம் மரக் கிளைகளை யானைகள் தும்பிக்கையால் சுமந்து கொண்டுவந்துகந்தனாலயபந்தலில்இடும். மாணிக்ககங்கையில்கழுவப்பட்டகிளைகள் ஆலயத்திற்கு முன்பாக போடப்பட்டிருந்த பந்தலில் யானைகளின் மூலம் மாற்றம் செய்யப்பட்டது.

அந்த காட்சியை ஆயிரக்கணக்கான மக்கள் பார்த்து ரசித்தார்கள்.

# காணி அபகரிப்பை தடுத்து நிறுத்தக்கோரி ஆர்ப்பாட்டம்

## பொன்நகர் கிராம மக்கள் நடத்தினர்



சட்ட விரோத காணி அபகரிப்பை தடுத்து நிறுத்த கோரி கிளிநொச்சி, பொன்நகர் கிராம மக்கள் நேற்று (திங்கட்கிழமை)ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர்.

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பொன்நகர் பகுதியில் அமைந்துள்ள காணிகளை அரச அதிகாரிகள் தன்னிச்சையாக முடிவெடுத்து, தமக்கு விரும்பியவர்களுக்கு வழங்கி வருகின்றனர் எனக் குற்றஞ்சாட்டியே இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் கிளிநொச்சி டிப்போ சந்தியில் ஆரம்பித்து கரைச்சி பிரதேச செயலாளர் அலுவலகம் மற்றும் மாவட்ட செயலகம் முன்பாக சென்று நிறைவடைந்தது. மாவட்ட அரசாங்க அதிபர் ரூபாவதிகேதீஸ்வரனின்பார்வைக்காகமகஜர் ஒன்றும் மேலதிக அரசாங்க அதிபர் ஸ்ரீமோகனிடம் இதன்போது கையளிக்கப்பட்டது. (05)

# அம்பாறை உதைப்பந்து நடுவர்களின் பொதுக் கூட்டமும் நிர்வாகத் தெரிவும்




அம்பாறை மாவட்ட உதைப்பந்து நடுவர்கள் அமைப்பின் வருடாந்த பொதுச்சபை கூட்டமும் நிர்வாக தெரிவும் கடந்த ஞாயிற்றுக்கிழமை கல்முனை சாஹிரா தேசிய கல்லூரி மண்டபத்தில் அமைப்பின்பதில்தலைவர்எம்.ஏ.பர்ஸான் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது பிராந்திய உதைப்பந்து மேம்பாடு, அம்பாறை மாவட்ட உதைப்பந்து நடுவர்கள் அமைப்பின் எதிர்கால செயற்பாடுகள், நடுவர்கள் கௌரவிப்புஉட்பட்டபல்வேறுவிடயங்கள் தொடர்பில் ஆராயப்பட்டது. இதனைத் தொடர்ந்து நடப் பாண்டுக்கான புதிய நிர்வாகம் தெரிவுசெய்யப்பட்டனர். அதனடிப்படையில் போசகர்களாக சிரேஷ்ட நடுவர்களான எம்.ஏ. நபார், எம்.ஐ.எம். அமீரலி ஆகியோரும், ஆலோசகர்களாக ஏ.எம்.எம். இப்றாஹிம், ஏ.எம். இப்றாஹிம், ஏ.எல்.ஏ. கனி, யூ.எல்.எம். ஹனீபா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

மேலும் தலைவராக எம்.எல்.எம். ஜமால்தீன், தவிசாளராக எம்.எல்.ஏ. தாஹீர், செயலாளராக அலியார் பைஸர், பொருளாளராக, எஸ்.எல்.வை. அரபாத், உப தலைவர்களாக எம்.ஏ. பர்ஸான், ஏ.எம். றிாத், எஸ்.எம். உபைத்தீன், உப செயலாளராக ஏ.எம். ஜப்றான், உப பொருளாளராக ஜே.ஏ. மஜித், கணக்கு பரிசோதகர்களாக எம். எம். றஜீப், ஐ. அஸ்பாக் ஆகியோர் சபையால் தெரிவு செய்யப்பட்டனர். (05)

# எஞ்சியுள்ள தமிழ் அரசியல் கைதிகளையும் விடுவிக்க குரலற்றவர்களின் குரல் கோரிக்கை



சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள எஞ்சியுள்ள 19 தமிழ் அரசியல் கைதிகளையும் அரசாங்கம் துரிதமாக விடுதலை செய்ய வேண்டும் என்று குரலற்றவர்களின் குரல் அமைப்பு ஜனாதிபதியிடம் வலியுறுத்தியுள்ளது.

கடந்த 23 ஆம் திகதி ஜனாதிபதியின் பொது மன்னிப்பில் விடுதலை செய்யப்பட்ட கனகசபை தேவதாசனை குரலற்றவர்களின் குரல் அமைப்பின் அமைப்பாளர் முருகையா கோமகன் நேற்று (திங்கட்கிழமை) நேரில் சென்று சந்தித்து கலந்துரையாடினார்.

இதனையடுத்து கருத்து வெளியிட்டுள்ள குரலற்றவர்களின் குரல் அமைப்பின் அமைப்பாளர் முருகையா கோமகன், அரசியல் கைதிகளை விடுதலை செய்யும் அரசாங்கத்தின் செயற்பாடு வரவேற்கத்தக்கதாகும் என்று குறிப்பிட்டார்.

மேலும், எஞ்சியுள்ள 19 தமிழ் அரசியல் கைதிகளை துரிதமாக விடுதலை செய்ய வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்தார்.

அத்தோடு, புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ள தேவதாசனுக்கு மேற்கொள்ளவேண்டிய வைத்திய சேவைகளை பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கைஎடுத்துள்ளகுரலற்றவர்களின் குரல் அமைப்பு, ஏனைய தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்காகவும் நலன்களுக்காகவும் தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் செயற்படும் என்றும் அவர் தெரிவித்தார். (05)

# மட்டக்களப்பில் தப்பியோடிய கைதியை கைது செய்ய விசாரணைகள் ஆரம்பம்

மட்டக்களப்பு, காத்தான்குடியில் கைது செய்யப்பட்ட நிலையில் தப்பிச் சென்ற சந்தேகநபரை மீண்டும் கைது செய்வதற்குக் காத்தான்குடி பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

10வயதுடையசிறுமிஒருவரைப்பாலியல் துஷ்பிரயோகம் செய்தமைக்காகக் குறித்த நபர் கைது செய்யப்பட்டிருந்தார்.

கைது செய்யப்பட்டவரை நேற்றுமுன்தினம் பதில் நீதிவானிடம் பொலிஸார் முன்னிலைப்படுத்தினர்.

எதிர்வரும்28ஆம்திகதிவரைவிளக்கமறியலில்வைக்குமாறுநீதிவான்உத்தரவிட்டமையைத் தொடர்ந்து சந்தேகநபரை மட்டக்களப்பு சிறைச்சாலை அதிகாரிகளிடம் ஒப்படைக்கப் பொலிஸார் அழைத்துச் சென்றனர்.

இதன்போதே குறித்த சந்தேகநபர் தப்பிச் சென்ற நிலையில் அவரைக் கைது செய்ய நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

# வேலை செய்துகொண்டிருந்த மூதாட்டி வழுக்கி விழுந்து பலி

நானுஓயா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நுவரெலியா – தலவாக்கலை பிரதான வீதியோரத்தில் பங்களாவத்த பகுதியில் உள்ள விவசாய நிலத்தில் வேலை செய்த மூதாட்டி ஒருவர் தோட்டத்திலிருந்து தவறி விழுந்து உயிரிழந்துள்ளார்.

நானுஓயா, எடின்புரோ பிரதேசத்தைச் சேர்ந்த 70 வயதுடைய வேலுசாமி காளியம்மா என்ற மூதாட்டியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த மூதாட்டி நேற்று விவசாய தோட்டத்தில் வேலைசெய்து கொண்டிருந்த போது மழையுடனான காலநிலை காரணமாகத் தோட்டத்தில் ஓரத்தில் இருந்து வழுக்கி நுவரெலியா – தலவாக்கலை பிரதான வீதியில் விழுந்து தலையில் பலமாக அடிப்பட்டதன் காரணமாக சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளர் என்று கூறப்படுகின்றது.

இந்த விபத்து குறித்து மேலதிக விசாரணைகளை நானுஓயா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

காலைக்கதிர்
Kalaikkathir

# மீன் இனங்களை எதிர்கால சந்ததியினர் கண்காட்சிகளில்தான் பார்க்க வேண்டும்!

## மெசிடோ நிறுவனம் வேதனை




கடலட்டை பண்ணைகளுக்காக வடக்கு கடலின் ஆழம் குறைந்த பகுதிகளை சீனாவின் பினாமி நிறுவனங்கள் ஆக்கிரமிக்குமானால், எதிர்கால சந்ததியினருக்கு மீன்களை கண்காட்சி நிகழ்வு களில்தான் காட்ட முடியும் என மெசிடோநிறுவனத்தின்உத்தியோகத்தர் விவேகி தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில்உலகவங்கியின் அறிக்கை தொடர்பாக கடற்தொழில் சங்கப்பிரதிநிதிகளுக்கு தெளிவுபடுத்தும் நோக்கில் இடம்பெற்ற கலந்துரையாடலில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

வடக்கில்வளமானகடல்பகுதிகளில் கடல் வேளாண்மை என்ற பெயரில் அட்டை பண்ணைகள் விரிவுபடுத்தப்படுகின்றன.

பாரம்பரியமாக கடல் தொழிலில் ஈடுபட்ட மீனவர்கள் தமது வாழ்வாதாரத்தைக் கொண்டு நடத்த முடியாத நிலையில், அவர்கள் மாற்றுத் தொழில்களுக்கு செல்லவேண்டிய துர்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது.

மேலும், மீன் இனங்கள் இனப்பெருக்கம் செய்யமுடியாத அளவுக்கு கடல் சேற்றுக்கடலாக மாற்றப்பட்டு வருவதால், எமது எதிர்கால சந்ததியினருக்கு மீன் இனங்களை காட்ட முடியாத சூழ்நிலை உருவாகும்.

தற்போதுஅலங்காரமீன்கள்கண்காட்சிக்காக வைக்கப்படும் நிலையில், நாம் காலங்காலமாக கடல் உணவாக உண்டு வந்த மீன்களை, மீன் கண்காட்சிகளில்தான் எமது எதிர்கால சந்ததியினருக்கு காட்டவேண்டிய சூழ்நிலை ஏற்படப்போகிறது.

மீன் உற்பத்திக்கு, கருவாட்டு உற்பத்திக்கு பெயர்போன மன்னார் மாவட்டத்தில் கோழிகளுக்கு உணவாக போடுகின்ற மண்டடத்திரலி மற்றும் செங்கன்னியை உணவு தேவைக்காக இன்று மக்கள் பயன்படுத்துகின்றனர்.

அது மட்டுமல்லாமல், சீனாவில் இருந்து பிளாஸ்டிக் முட்டைகள் இறக்கப்படுவதாக குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன. சீனா செயற்கை மீன்களையும் உணவுக்காக உற்பத்தி செய்து சந்தைப்படுத்துகிறது.

வடக்கில் இயற்கையாக மீன் இனங்கள் கிடைக்கும் கடல் பகுதிகளை ஆக்கிரமித்து தனது நாட்டுக்கு தேவையான அட்டைகளை உற்பத்திசெய்து ஏற்றுமதிசெய்யும்நிலையில் எமது மக்கள் தகரத்தில் அடைக்கப்பட்ட மீன்களை உணவாக உட்கொள்கின்றனர்.

இயற்கை நீரோட்டங்களை மறித்து, கடலட்டை பண்ணைகள் அமைக்கப்பட்டு வருவதால் மீன் இனப்பெருக்கம் குறைவடைந்துள்ள நிலையில், பிடிபடும் மீன்கள் வெளிநாடுகளுக்கும் ஆடம்பர விடுதிகளுக்கும் அனுப்பப்படுகின்றன.

ஆகவே, வட பகுதியில் மட்டுமல்ல, இலங்கையிலும் யாரும் உணவுத் தேவைக்காக பயன்படுத்தாத கடலட்டையை 'டொலர் பெறப் போகுறோம்'எனக்கூறிஅந்நியநாட்டவர்களுக்கு கொடுத்து, எமது கடல் வளத்தை அழிக்க இடங்கொடுக்கக் கூடாது என அவர் தெரிவித்தார். (05)

# நாட்டில் சட்டங்கள் பாதுகாக்கப்படுவதோடு நியாயமாக நடைமுறைப்படுத்தப்படல்வேண்டும்

## மக்களும் அதனையே எதிர்பார்க்கிறார்கள் என்கிறார் அநுரகுமார

சட்டங்கள் பாதுகாக்கப்பட வேண்டும். அந்த சட்டங்கள் நியாயமான முறையில் நடைமுறைப்படுத்தப்படும் நாடொன்றையே மக்கள் எதிர்பார்க்கிறார்கள்.

எனினும் ஆட்சியாளர்கள் இந்த சட்டங்களில் சிக்கியுள்ளமையால் அதிலிருந்து விடுபடும் வழிமுறையையே சிந்திக்கிறார்கள்.

மக்களின் எதிர்பார்ப்பும், ஆட்சியாளர்களின் எதிர்பார்ப்பும் இரண்டு விதமாக இருக்கிறது என தேசிய மக்கள் சக்தியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

ஆஸ்திரேலியாவின், மெல்போர்ன் நகரில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு -

உங்கள் எதிர்பார்ப்பு என்ன? சட்டம் பாதுகாக்கப்படும் ஒரு நாடு. அத்துடன்அந்தசட்டங்கள்நியாயமான முறையில் நடைமுறைப்படுத்தப்படும் நாடொன்றை எதிர்பார்க்கிறீர்கள். எனினும் ஆட்சியாளர்கள் என்ன நினைக்கிறார்கள்?

நாம் சட்டத்தில் சிக்கியுள்ளோம். அதிலிருந்து விடுபடும் வழிமுறையை பார்க்கிறார்கள்.

எனினும் மக்களின் எதிர்பார்ப்பும், ஆட்சியாளர்களின் எதிர்பார்ப்பும் இரண்டு விதமாக இருக்கிறது. எந்த திசையில் கட்டியெழுப்படுகிறது என கூற முடியுமா?

தொட்டில் இந்த பக்கம் இருக்கும். மீண்டும் 5 வருடங்களில் மறுபக்கத்திற்கு சென்று விடும். அழகான முறையில் அந்த தொட்டில் ஆடுகிறது.

சிலர் தொட்டில் ஆடும் போது அதில் ஏறி மறுபுறம் வருகின்றனர். எவரும் இறங்குவதில்லை. தற்போது தொட்டில் இடையில் சிக்குண்டுள்ளது. எனவே, அதனை தடுப்பதற்கான அனைத்து விடயங்களையும் அவர்கள் மேற்கொள்கின்றனர். - என்றார். (05)



# தமிழ் சைவம் காக்க எங்களம்மா தங்கம்மா !



தங்கம்மா எங்களம்மா
தமிழ்சைவம் காக்கவந்தார்
வெங்கலமாம் குரல்கொண்டு
மிகுசைவம் உரைத்துநின்றார்
இங்கிதமாய் சங்கத்தமிழ்
எங்குமே உவந்தளித்தார்
எங்களது தவப்பயனாக
இப்புவியி லவர்பிறந்தார்

சிற்றின்பம் தனைத்துறந்தார்
சிவமதனை மனம்நிறைத்தார்
பற்றுடைய ஆசைகளைப்
ற்றாம லவரிருந்தார்
நற்கருணை மனங்கொண்டு நானிலத்தை அவர்பார்த்தார்
நற்றவத்தின் பயனாக நல்வரமாய் அவர்பிறந்தார்

தெல்லிப்பளைத் திருநகரை திருத்தலமாய் ஆக்கினார்
தேடிவந்து துர்க்கையம்மன் திருவடியைச் சரண்புகுந்தார்
நல்லவரைத் தொண்டினுக்காய் நயமுடனே அவரணைத்தார்
நலன்காக்க நானிலத்தில் பிறந்தாரே எங்களம்மா

பக்தியொடு பக்குவத்தை பலருள்ளும் விதைத்தாரே
பண்பாடி இன்னிசையால் பலகருத்தை மொழிந்தாரே
நித்தமுமே சத்தியத்தை நிலைநிறுத்த முயன்றாரே
நீள்பணியைச் சுமந்தபடி நெடும்பயணம் சென்றாரே

பலநாடு பலவமைப்பின் பாராட்டும் பெற்றாரே
பண்டிதராய் புலவராய் குருவெனவே திகழ்ந்தாரே
செந்தமிழைச் சிவத்தோடு சேர்த்தணைத்து நின்றாரே
சிவத்தமிழ்ச் செல்வியாய் செகம்போற்ற மிளிர்ந்தாரே

சிவஞான வித்தகராய் ஒளிபரப்பி நின்றாரே
திருவாசகக் கொண்டலாய் அவையேறி அமர்ந்தாரே
துர்க்கா துரந்தரியாய் தொண்டாற்றி உயர்ந்தாரே
தூய்மைநிறை மனத்தினராய் தெய்வத்திரு மகளானார்

அல்லற்பட்ட பெண்களுக்கு ஆறுதலாய் அவரிருந்தார்
அவரிருக்க இருப்பிடத்தை ஆரம்பித்தார் எங்களம்மா
தொடக்கிவைத்த பணியனைத்தும் தொலைதூரப் பார்வையுடன்
எடுத்தவரும் நின்றதனால் எல்லோரும் வாழ்த்துகிறார்

பெண்ணடியார் வரிசையிலே எங்களம்மா தங்கம்மா
மண்ணகத்தில் வரமெனவே வந்துநின்றார் மாவொளியாய்
இருளுறைந்த வாழ்க்கையிலே ஏற்றிவைத்தார் ஒளிவிளக்கை
அவ்விளக்கின் ஒளிபெருகி ஆறுகிறார் பலரிப்போ

துர்க்கையம்மன் தாழ்பணிந்து தொடக்கிவைத்த தொண்டிப்போ
பற்பலவாய் கிளைபரப்பி பயனளித்துச் செழிக்கிறது
தக்கபல துணைபெருக தன்வாழ்வை அர்ப்பணித்தார்
மக்களது நலன்நிறைத்த மங்கைநல்லா ளெங்களம்மா

தனிப்பெண்ணாய் எழுந்துநின்று தளர்வின்றிப் பணியாற்றி
சமுதாயம் சமயமென எண்ணியெண்ணி செயலாற்றி
தன்மொழியை உணர்வாக்கி தரணியெங்கும் வலம்வந்தார்
தாய்க்குலத்தின் தவச்செல்வி எங்களம்மா தங்கம்மா

நல்லைநகர் நாவலரை நாமென்றும் இழக்கவில்லை
சொல்லவல்ல நிலையினிலே எங்களம்மா வந்துவிட்டார்
நாவலரின் வழிநடக்க நம்மம்மா துணையானார்
நாளுமே அம்மாவை நாம்போற்றி நின்றிடுவோம்

தன்வழியில் நடப்பதற்கு சரியான பிள்ளைகளை
சன்மார்க்க வழியினிலே பயிற்றுவித்தார் எங்களம்மா
எங்களம்மா தலைப்பிள்ளை ஏற்றபணி ஆற்றுகிறார்
மங்கலமாய் தங்கம்மா மனமெல்லாம் நிறைகின்றார்

**மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா**
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்
மெல்பேண் ... ஆஸ்திரேலியா

# இலக்கியத்தில்இணைந்தபனை......

(4ஆம் பக்கத் தொடர்ச்சி)

இப்பாடல் அமைகிறது. இப்பாடலில்பனைபற்றியசெய்தியும் இடம்பெறுவது நோக்கத்தக்கதே. 'நீர்க் காக்கைகள் உலாவும் பொய்கையில்கரியபனம்பழங்கள் விழவும்,வாளைமீன்கள்அவற்றை நீர்க்காக்கையாகக்கருதிவிழுங்கப் பாயும் - திருக்குறுங்கடியில் எழுந்த பெரியோனே ! ஆளரியாய்த் தோன்றி இர ணியனை இரு கூறாக்கியதும் நீ தானே ! என்று இப்பாடல் கருத்து அமைகிறது. இங்கு பனையின் பழம் காட்டப்படுவது பனையினை உட்புகுத்தி நிற்கிறது அல்லவா !

நம்மாழ்வார் திருமொழியில் பனைமரம் பற்றி பனைத்தாள் மதகளிறு அட்டவன் பாதம் பணிமினோ என்கின்றார். திருமங்கை ஆழ்வார் - ஏடு ஒத்து ஏந்தும் நீள் இலைவேல் எங்கள் இராவணனார் ஓடிப் போனார் என்று குறிப்பிடுகிறார்.

பனைபற்றி பல செய்திகளை இலக்கிய வழியில்பயணப்பட்டால் காணக் கூடியதாக இருக்கிறது. தோடு என்றால் அது பெண்கள் காதில் அணிவதுதான். சிவனின் ஒரு காதில் தோடு இருக்கிறது. இதனைச் சம் பந்தர் தோடு டைய செவியன் என்று காட்டுகிறார். சிவனின் இடது செவியில் தோடு இருக்கிறது. வெண்தோடானது பனம்பூவின் புறவிதழ் போலிருக்கிறதாம் -

பெருமடற் பெண்ணைப் பிணர்ந்தோட்டுப் பைங்குரும்பை என்று கலித் தொகையும் , இனமடற்பெண்ணை ஈர்ந்தோடு திருத்தி என்று பெருங்கதையும், இரும்பனை வெண்தோடுமலைந்தோன் என்று புறநாநாறும் ,

தோடே மடலே ஓலை என்றா
ஏடே இதழே பாளை என்றா

ஈர்க்கே குலை என நேர்தான பிறவும்என்றுதொல்காப்பியம்தொட்டுக் காட்டுவதும் கற்பகதருவாம் பனை பற்றியதே என்பதை கருத்துவது அவசியம் அல்லவா !

தங்கத்தாத்தா என்று வியந்து போற்றப்படும் எங்கள் நவாலியூர் தந்த புலவர் பெருமான் கற்பகதருவாம் பனைபற்றி தாலவிலாசம் என்று காவியமே பாடிப் பெருமகிழ்வு அடைகின்றார். அவரின் உள்ளத்திலிருந்து எழுந்த எண்ணங்களை அவரின் தாலவிலாசத்தின் வாயிலாக கண்டு களிப்படையலாம். கற்பகத ருவாம் பனையினை எங்கள் தங்கத்தாத்த அணுவணுவாய் இரசிக்கிறார்! அணுவணுவாய் ஆராய்கிறார் ! பனைபற்றிசிறந்தநூலொன்றினை அவரின் அகத்தினின்று எழுந்த அரிய வார்த்தைகளால் கவிதை வடிவில் தந்திருக்கிறார் ! அவரின் அந்த வண்ணத்தமிழ் கவிதைகளைப் படிப்பவர்கள் கற்பக தருவாம் பனையினை நிச்சயம் கருத்திருத்தாமல் விடவே மாட்டார்கள். அந்த அளவுக்கு எங்கள் தங்கத்தாத்தாவின் மந்திரச் சொற்கள் கற்பகதருவை காட்டி நிற்கிறது எனலாம்.

மன்னுயிர் ஞாலத்து வான்பனையின் மேன்மையெலாம்
பன்னுகலி வெண்பாவாற் பாடவே - முன்னவர்வரு
போதனே விக்கினங்கள் போக்குகின்ற பூதகண
நாதனே முன்னே நட

என்று தாலவிலாசத்துக்குக் காப்புச் சொல்லி - பின்னர் நூல் நிலை பற்றி சொல்லி ......

ஓங்கார மூலத் தொருவனிரு தாடொழுது
பாங்கார் தமிழ்க்கலிவெண்பா பாட்டினால் – வீங்குபுகத்
தால விலாசந் தனையுரைப்பேன் தெண்டிரைசூழ்
ஞால முணர்க நயந்து
நிறைவாக கற்பகதருவை வியந்து
வாழ்த்தி மகிழுகின்றார்.
பொன்னின் மழைவாழி பூமி நலம்வாழி
மன்னுயிர்கள் வாழி யறம்வாழி – எந்நாளும்
கற்பகம்போ லீயுங் கடவுட் பனைவாழி
நற்றமிழும் வாழி நயந்து

தங்கத்தாத்தா நினைவுக்கு வருகிறார். கூடவே சின்னத்தம்பிப் புலவரும் வந்து நிற்கிறார். அவரும் கற்பகதருவை விட்டுவிடவில்லை.......

கோள்நிலைகள் மாறி மாரிமழை வாரி வறண்டாலும்
கொடிய மிடி வந்து மிகவே வருந்தினாலும்
தான் நிழலளிதுயர் கலாநிலையமே போல்
தந்து பல வேறு பொருள் தாங்கு பனையே

என்றுசின்னத்தம்பிப்புலவரும் கற்பகதருவை வியந்து நிற்கிறார் என்பதற்கு இக்கவியே சான்று.

பனை நூறு என்னும் நூலும் கற்பகதருவினை எப்படிச் சொல்லுகிறது பாருங்கள்.......

நீண்ட வுடலும் நேரிய கோடும் கார்நிறமும்
பூண்டா யன்ன பூவுலகத்தில் நின்னைப்போல்
யாண்டு மிலாதால் வைரமுடைநற் றாருவெனில்
தூண்டும் மன்பே தூயதலாது தோற்றம்மே
நீற்றைப்பூசும் வானம் பரவும் நிறையும்நூல்
ஏற்றுக் கொள்ளும் யாண்டு முவக்கு மெவர்க்கும்
சாற்றும் ஞானந் தந்திடு மன்பிற் றலைநிற்கும்
போற்றந் தணர்கள் போலப் பனையும் பொலியுமே
வேண்டிய யாவு மீயும் வியன்றரு மியல்புகண்டே
ஆண்டுபல் லாயி ரம்முன் னறிவுடை யெமது முன்னோர்
காண்டரு தாலந் தன்னைக் கற்பகத்தாரு வென்றார்
நீண்டநா ளோம்பி இஃதை நீவிரின் புற்று வாழ்வீர்

பேராதனைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்த்துறைப் பேராசிரியராய் இருந்தவர் கணபதிப்பிள்ளை அவர்கள். சுவாமி விபுலானந்தரின் நேரடி மாணவராக விளங்கியவர். மொழி ஆராய்ச்சி வல்லுனர். அதேவேளை நாட்டர் வழக்கியலிலும் ஆற்றல் மிக்கவர். இவரின் கவிகள் படிக்கப் படிக்கச் சுவையினை நல்கும். அவரின் எண்ணத்தில் கற்பகதரு வருகிறது பார்ப்போமா ........

அழகுறு வன்னம் அமைவுறப் போட்டுத்
தொழிலமை வனிதையர் திறமையாலிழைத்த
பெட்டியாய் குட்டான் பெயர் பெறு கதிர் பாய்
அடுக்குப் பெட்டியும் சுடும்
பிட்டவி நீத்துப் பெட்டியும் சுண்டும்
பனையின் குருத்தை பதனமாய் வார்த்து
பன்னிறம் தீட்டிய பன்னோலை கொண்டு
கைவல் இளையர் கருதி இளைத்த
ஆனைப் பெட்டியும் அழகிய தேரும்
கொட்டைப் பெட்டியும் கிலுக்குப் பெட்டியும்
எனவாங்கு, இன்னணம் நெருங்கிடு
பன்னங் கடைகளும்

என்று சொல்லியதோடு அமையாமல் , கற்பகதருவில் மனத்தை இருத்தி

நரைதோல் இயனம் அரையில் கட்டி
அதன் கீழ் முட்டி அசைதர விட்டு
மார்போடணையத் தோளது தூக்கி
உரனுரு தளை நார் காலினை மாட்டிக்
கால் மடித்து உன்னிக் கரு நெடும் பனைமிசை
பாளை தட்டி பார்த்துச் சீவி
ஏர் தரும் ஊசலோடு இயனத்தசையும்
இன் கள் முட்டியொடு இறங்கும் போதில்
அடி மரத்திருந்து நுனி வரை நோக்கி
நாநீர் ஊற உதடு வருடி
பெரு மகிழ்வோடு பிளாவை ஏந்தி
அருவிலை கொடுத்து நறவினை மாந்திக்
களிப்புறு மாக்கள் விளிப்புறு கும்பலும்

என்று பேராசிரியர் மனமெழுந்த காட்சி இப்படிக் கவியாய் விரிகிறது. நாட்டார் பாடல்களிலும் பனைபற்றி வருவருகிறது. அப்பாடல்தான் என்ன சொல்லுகிறது எப்படிப் பனையைக் காட்டுகிறது என்று பார்ப்போமா ....

பட்டாங் கத்தி பள பளென
பாலையன் கோட்டை நறநென
பனையும் கருத்திருக்கும்
பனை வட்டும் சிவந்திருக்கும் – அதிலே
இறக்கிய பதநீரைப் பருகினால்
தலை கிறு கிறுக்கும்
தேடுதற்கும் வகையறியேன் – உன்
திருக்கோயில் தவறணையைத் தேடிக்கொண்டு
ஓடிவரும் பக்தர்க்கு குறைவே இல்லை
உன்னுடைய கிருபையினைச் சொல்லி சொல்லிப்
பாடுதற்கு வகையறியேன் – பாளை வேந்தா
பாவிகளை மகிழ்விக்கும் பான தேவா
நீடுலகில் என் போன்ற ஏழைகட்கு
நீயின்றி யாருதவி சொல்லுமையா
சண்டையிலே பிறப்பாய் போற்றி
சல்லியைப் பறிப்பாய் போற்றி
மண்டையை உடைப்பாய் போற்றி
மகளிரை அடிப்பாய் போற்றி
பாளையில் பிறப்பாய் போற்றி
பனைதரும் கொடையே போற்றி

என்று நாட்டுப்பாடலிலும் பனைபற்றிவருவதும்-பனையின் நிலையினை பாமரர் எப்படிப் பார்க்கிறார்கள் என்பதை காட்டி நிற்கிறதல்லவா !

நாராய் நாராய் செங்கால் நாராய்
பழம்படு பனையின் கிழங்கு பிளந்தன்ன
பவளக் கூர்வாய் செங்கால் நாராய்

இந்தப்பாடல்யாரால்எழுதப்பட்டது என்பது தெரியாத நிலையில் கவிதையில் வருகின்ற (முழுக்கவிதையைப்பார்க்க) சத்திமுத்த வாவி என்பதை





எண்ணி அப்புலவரை சத்திமுத்துப்புலவர் என்று அடையாளப்படுத்தி விட்டார்கள்.அப்பெயரே நிலையாகியும் விட்டது, பழம்படு பனையின் கிழங்கு பிழந்தன்ன பவளக்கூர்வாய் என்னும் வரிகள் புலவரின் அழகான படிமமாய் இங்கே அமைகிறது. எங்களின் கற்பகதருவாம் பனையினை - பெயர் தெரியா ஒரு புலவரும் தன்னுடைய மனத்தில் இருத்தி நல்லதொரு கவிதையாய் வடித்திருக்கிறார். சிறிய வயதில் படித்துப் பாடமாக்கிய இக்கவிதையும் கற்பகதருவாம் பனையினைக் காட்டியே நிற்கிறது என்பதும் கருத்திருத்த வேண்டியது அல்லா !

(வளரும்)


OKAYA
ELECTRIC VEHICLES
dsl
பெட்ரோல் பைக்குகளை பயன்படுத்துவதை
விட 77% இலாபமான பாவனைக்கு
The inEVitable
Future of Smart Mobility
FAAST-F4
140-160 KM ஒருமுறை* சார்ஜ் செய்தால்
FAAST-F2T
80-85 KM ஒருமுறை* சார்ஜ் செய்தால்
FREEDOM
70-75 KM ஒருமுறை* சார்ஜ் செய்தால்
Rs.550,000/- இருந்து
இந்தியாவில் அதி வேகமாக
விற்பனையாகும் மின்சார வாகனம்
2
3

காலைக்கதிர் Kalaikkathir

# காத்தான்குடி மத்திய கல்லூரி வருடாந்த விளையாட்டு நிகழ்வு








(ந.குகதர்சன்)

மட்டக்களப்பு மத்தி கல்வி வலயத்திற்குட்பட்ட காத்தான்குடி மத்திய கல்லூரியின் 93ஆவது வருடாந்த இல்லமெய்வல்லுனர் விளையாட்டுநிகழ்வுகல்லூரிமைதானத்தில் நடைபெற்றது. கல்லூரியின் முதல்வர் எம்.ஏ.நிஹால் அஹமட் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் மட்டக்களப்பு மத்தி வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.எம்.எம்.அமீர் பிரதம அதிதியாக கலந்து கொண்டதுடன், மேலும் காத்தான்குடி பிரதேசசெயலகஉதவிப்பிரதேசசெயலாளர் எம்.எஸ்.எப்.சில்மியா, காத்தான்குடி கோட்டக்கல்விஅதிகாரிஎம்.எம்.கலாவூதீன், பாடசாலை முன்னாள் அதிபர்கள், பிரதேச பாடசாலை அதிபர்கள், கல்வியலாளர்கள், பழையமாணவர்கள், பாடசாலைஅபிவிருத்திக்குழுவினர், பிரமுகர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

உத்தியோகபூர்வ விளையாட்டுக் கொடியினை இல்ல விளையாட்டுக்கு பொறுப்பான ஆசிரியர் எஸ்.எச்.பிர்தௌஸ் ஏற்றியதுடன், ஆசிரியர் எம்.மோகன குமாரினால்மூன்றுமரியாதைவேட்டுக்கள் தீர்க்கப்பட்டு, மட்டக்களப்பு மத்தி வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.எம்.எம்.அமீரினால்விளையாட்டுநிகழ்வுகள்ஆரம்பித்து வைக்கப்பட்டன. இங்கு மாணவர்களின் ஓட்டப் போட்டி, பழைய மாணவர்களின் அஞ்சலோட்டம், அணிநடை கண்காட்சி, அணிநடை வகுப்பு, பாடசாலை அபிவிருத்திச் குழுவினரின் சங்கீத கதிரை, என்பன இடம்பெற்றதுடன், பாடசாலை உடற்கல்வி ஆசிரியர் க.புருசோத்மன் வழிகாட்டலில் மாண வர்களின் சாசக கண்காட்சி இடம்பெற்றதுடன்கலந்துகொண்டவர்களை நெகிழ்ச்சிப்படுத்தியமை குறிப்பிடத்தக்கது.

நடைபெற்ற இல்ல விளையாட்டு போட்டியில் றூமி இல்லம் (நீலம்) 256 புள்ளிகளை பெற்று முதலாம் இடத்தினையும், இக்பால் இல்லம் (சிவப்பு) 207 புள்ளிகளை பெற்று இரண்டாம் இடத்தினையும், ஒமர் இல்லம் (பச்சை) 203 புள்ளிகளை பெற்று மூன்றாம் இடத்தினையும்பெற்றுக்கொண்டனர். இதன்போது வெற்றி பெற்ற இல்லங்கள், வெற்றி பெற்ற விளையாட்டு வீரர்களுக்கு வெற்றிக் கிண்ணம் வழங்கி வைக்கப்பட்டதுடன், மரதம் ஓட்டப் போட்டியில் வெற்றி பெற்ற வீரர்களுக்கு பணப் பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டது. இங்கு விளையாட்டு முகாமைத்துவக் குழுவினரால் கடந்த 1996.01.16 முதல் கல்லூரியில் உடற்கல்வி ஆசிரியராக இணைந்து ஆசிரியராக, பகுதித் தலைவராக, பிரதி அதிபராக மற்றும் கல்லூரியின் வரலாற்றில் அதி கூடிய காலம் அதிபராக கடமையாற்றி கல்லூரியின் விளையாட்டுத் துறை வளர்ச்சிக்கு தன்னை முழுமையாக அர்ப்பணித்துச் செயற்பட்டமைக்காக ஆசிரியர் எஸ்.எச்.பிர்தௌஸ் அவர்களுக்கு கல்லூரியின் 93வது வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டியின் இறுதி நாள் நிகழ்வில் வைத்து பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார்.

## நலன்புரித் திட்டத்தில் உள்வாங்கப்படாத சமுர்த்திப் பயனாளிகள் பெரும் போராட்டம்

### நுவரெலியாவில் நேற்று நடந்தது



அரசாங்கத்தால் புதிதாக அறிமுகம் செய்யப்பட்டுள்ள 'அஸ்வெசும' நலன்புரி திட்டத்தில் தகுதியானவர்கள் உள்வாங்கப்படவில்லை எனத்தெரிவித்துநுவரெலியாவில் பாரிய போராட்டமொன்றை முன்னெடுத்திருந்தனர்.

இந்தக் கவனவீர்ப்பு போராட்டம் நுவரெலியா பிரதேச செயலகம் மற்றும் நுவரெலியா பிரதான தபால் நிலையத்துக்கு முன்பாக நேற்று (திங்கட்கிழமை) முன்னெடுக்கப்பட்டது.

நுவரெலியா பிரதேச செயலகத்துக்கு முன்னால் ஆரம்பித்த எதிர்ப்பு பேரணி நுவரெலியா எலிசபெத் மகாராணி வீதி, லோசன் வீதி, வழியாக நுவரெலியா பிரதானதபாலகம்முன்நின்று தமதுஎதிர்ப்பைவெளிப்படுத்தியத்திய நிலையில் கலைந்து சென்றமைகுறிப்பிடத்தக்கது, (05)

## பொதுச்சுகாதாரஉத்தியோகத்தர்களுக்கு தடுப்பூசி முகாமைத்துவ பயிற்சித் திட்டம்





தடுப்பூசிகளைதிறம்படநிர்வகிப்பதில் பொது சுகாதார பரிசோதர்கள் மற்றும் பொது சுகாதார மாதுக்களின் அறிவு மற்றும்திறன்களை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட தடுப்பூசி முகாமைத்துவம்தொடர்பான விரிவான பயிற்சித்திட்டம் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை பிராந்தியதொற்றுநோய்நிபுணர்டாக்டர் எம்.ஏ.சி.எம்.பசாலின் ஏற்பாட்டில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர்ஐ.எல்.எம். றிபாஸ்தலைமையில் பணிமனை கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. புகழ்பெற்ற பிராந்திய தொற்றுநோயியல் நிபுணரான டாக்டர் எம்.ஏ.சி.எம். பஸால் வளவாளராக இந் நிகழ்ச்சியில் பங்காற்றினார். இத்துறையில் அவரது நிபுணத்துவமும் அனுபவமும் பங்கேற்பாளர்களுக்கு மதிப்புமிக்க நுண்ணறிவு மற்றும் வழிகாட்டுதலை வழங்கியது. இந்த பயிற்சி தடுப்பூசி நிர்வாகத்தின் சேமிப்பு, விநியோகம், கண்காணிப்பு மற்றும் பாதகமான நிகழ்வு அறிக்கையிடல் உள்ளிட்ட பல்வேறு அம்சங்களை உள்ளடக்கியதாகக் காணப்பட்டது. இப்பயிற்சித் திட்டத்தினூடாக ஒட்டுமொத்த தடுப்பூசி முகாமைத்துவ அமைப்பை மேம்படுத்தவும், பொதுமக்களுக்கு தடுப்பூசிகளை திறம்பட வழங்குவதை உறுதி செய்யவும், இப்பகுதியில் சுகாதார உள்கட்டமைப்பை மேலும் வலுப்படுத்தவும் எதிர்பார்க்கப்படுகிறது. (05)

## கொழும்பில் கோர விபத்து; தமிழ் வர்த்தகர் உயிரிழப்பு!

### மனைவி காயங்களுடன் வைத்தியசாலையில்

கொழும்பில் இடம்பெற்ற வாகன விபத்தில் தமிழ் வர்த்தகர் ஒருவர் சாவடைந்துள்ளார். அவரின் மனைவி படுகாயமடைந்துள்ளனர்.

கொழும்பு, இரத்மலானை பிரதேசத்தில் இன்று காலை 8 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய-வருவதாவது:-

தனது வர்த்தக நிலையத்துக்கு மனைவியை மோட்டார் சைக்கிளில் ஏற்றிக்கொண்டு குறித்த வர்த்தகர் பயணித்துள்ளார்.

இதன்போது எதிரே வந்த ஹயஸ் வாகனம் மோட்டார் சைக்கிள் மீது மோதியதில் குறித்த வர்த்தகர் சம்பவ இடத்திலேயே சாவடைந்துள்ளார். அவரின் மனைவி படுகாயங்களுடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

திருகோணமலையைச் சேர்ந்தவரும் இரத்மலானையில் வசிப்பவருமான பாரதிராஜா முகுந்தன் (வயது 44) என்ற வர்த்தகரே விபத்தில் உயிரிழந்துள்ளார்.

ஹயஸ் வாகனத்தின் சாரதியைக் கைது செய்துள்ள பொலிஸார், சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

### ஜூலை வரை பொறுமை காக்கின்றோம்

## ரணில் வழங்கிய வாக்குறுதி தொடர்பில் சுமந்திரன் கருத்து

தமிழர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு எதிர்வரும் ஜூலை மாதம் வரை பொறுமையாக இருக்குமாறு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியிடம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வாக்குறுதி வழங்கியுள்ளார்.

- இவ்வாறு தமிழ் அரசுக் கட்சியின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

தமிழர் பிரச்சினைக்கான தீர்வாக ஜனாதிபதியிடம் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி கோரிக்கைகளை முன்வைத்துள்ளது. அது தொடர்பில் ஆராய்ந்து ஜூலை மாதத்தின் பின் உரிய நடவடிக்கை எடுப்பதற்கே ஜனாதிபதி இவ்வாறு கால அவகாசம் விதித்துள்ளார். அதுவரை நாம் பொறுமையுடன் காத்திருக்கின்றோம். எமது பிரச்சினைக்கான தீர்வைத் தேடி நாம் இந்தியா செல்ல வேண்டிய தேவை இல்லை. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன்பேசிதீர்வைப்பெற்றுக்கொள்ளலாம் என்று நாம் நம்புகின்றோம். - என்றார்.

## தந்தையும் மகனும் வெட்டிக்கொலை!

### -மகளின் காதலன் வெறியாட்டம்




தந்தையும் மகனும் வாளால் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

இந்தக் கொடூர சம்பவம் அநுராதபுரம் மாவட்டம், கெக்கிராவை பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

மகளின் காதலுக்கு எதிர்ப்புத் தெரிவித்த தந்தையும், மகனுமே இவ்வாறு படுகொலைசெய்யப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-

கெக்கிராவை பிரதேசத்தில் இவ்வருடம் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை எழுதிய மாணவி ஒருவர், அப்பிரதேசத்திலுள்ள ஓட்டோ சாரதியான இளைஞர் ஒருவரைக் காதலித்து வந்துள்ளார்.

இதற்குக் குறித்த மாணவியின் தந்தையும், சகோதரரும் கடும் எதிர்ப்புத் தெரிவித்து வந்துள்ளனர்.

இந்நிலையில், நேற்று முன்தினம் (25) மாலை தனது காதலியின் வீட்டுக்கு ஓட்டோவில் சென்ற காதலன், காதலியை வலுக்கட்டாயமாகத் தனது வீட்டுக்கு அழைத்துச் செல்ல முற்பட்டுள்ளார்.

இதன்போது காதலன் மீது காதலியின் தந்தையும், சகோதரரும் கொட்டன்களால் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

தாக்குதலில் காயமடைந்த காதலன், தனது ஓட்டோவில் மறைத்து வைத்திருந்த வாளால் காதலியின் தந்தையையும், சகோதரரையும் சராமரியாக வெட்டி விட்டு அங்கிருந்து ஓட்டோவில் தப்பியோடியுள்ளார்.

53 வயதுடைய காதலியின் தந்தை நேற்றுமுன்தினம் (25) மாலை சம்பவ இடத்திலேயே சாவடைந்துள்ளார். 25 வயதுடைய காதலியின் சகோதரர் படுகாயங்களுடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில் நேற்று (26) மாலை சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் 26 வயதுடைய இளைஞரைக் கைது செய்துள்ள பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## யானை தாக்கி இளைஞர் சாவு

காட்டு யானை தாக்கி இளைஞர் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் மதவாச்சியில் இன்று அதிகாலை 5 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

குறித்த நபர் வயலுக்குச் சென்ற போதே யானையின் தாக்குதலுக்கு இலக்காகி சம்பவ இடத்திலேயே சாவடைந்துள்ளார்.

27 வயதுடைய இளைஞரே இதன்போது உயிரிழந்துள்ளார்.

சம்பவ இடத்திலிருந்து சடலத்தை மீட்ட பொலிஸார், இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்தனர்.

## காலிமுகத்திடல் யாசகர்கள் புனர்வாழ்வு நிலையத்துக்கு



கொழும்பு - காலிமுகத்திடலில் உள்ள யாசகர்கள் அம்பாந்தோட்டை - ரிதியாகம சமூக சேவைகள் புனர்வாழ்வு நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்படவுள்ளனர்.

அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா இதனைத் தெரிவித்துள்ளார்.

காலிமுகத்திடலில் அதிகரித்து வரும் யாசகர்களால் உள்ளூர்வாசிகள் மற்றும் சுற்றுலாப்பயணிகள் உள்ளிட்டோர் இன்னல்களுக்கு முகங்கொடுத்துள்ளனர் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

காலிமுகத்திடலில் சுமார் 150 இற்கும் மேற்பட்ட யாசகர்கள் இருக்கின்றனர் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

அங்கு பார்வையாளர்களுக்குச் சுகாதாரம் மற்றும் ஏனைய தேவையான வசதிகள் வழங்கப்பட்டுள்ளன.

இருப்பினும், பசுமைத் திடலில் யாசகர்களால் ஏற்படும் பொது துன்புறுத்தல்கள் குறித்து முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

எனவே, குறித்த யாசகர்களை அம்பாந்தோட்டை - ரிதியகமவில் உள்ள சமூக சேவைகள் புனர்வாழ்வு நிலையத்துக்கு இடமாற்றம் செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir

# யாழ்ப்பாணம் மாநகர சபை

## வீதிகளுக்கு பெயர் சூட்டுதல்

**பின்வரும் வீதிகளை வர்த்தமானியின் பிரசுரித்து மாநகர சபைக்குரிய வீதிகளாக பதிவுசெய்யவுள்ளதால் இதற்கு பொதுமக்களின் கருத்தினை எதிர்பார்க்கின்றோம். மக்களின் கருத்துக்களை/அபிப்பிராயகளை எதிர்வரும் 20.07.10ஆம் திகதிக்கு முன்னர் ஆணையாளர், மாநகரசபை, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். வீதிகளின் இட அமைவுகள் பற்றிய சந்தேகங்களை மாநகரசபையில் அறிந்துகொள்ளமுடியும்.**

| தொ. இல | குறியீட்டு இலக்கம் | வீதியின் பெயர் | தொடக்கம் | முடிவு | வீதிக்கோட்டு நீளம் (அடி) | வீதியின் நீளம் (கி.மீ) | சராசரி அகலம் - மீற்றர் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 512 | ஆத்திசூடி வீதி உப ஒழுங்கை | ஆத்திசூடி வீதி | பலாலி வீதி 5ம் ஒழுங்கை | 15 | 0.205 | 2.4 |
| 2 | 335 | அரசடி வீதி இணைப்பு வீதி | அரசடி வீதி | ஆள்காட்டிவளவு ஒழுங்கை | 15 | 0.218 | 2.7 |
| 3 | 334 | புறாடி முன் ஒழுங்கை | கண்டி வீதி | கச்சேரி கிழக்கு ஒழுங்கை | 20 | 0.148 | 3.3 |
| 4 | 1037 | பிறவுண் வீதி முதலாம் ஒழுங்கை உப ஒழுங்கை | பிறவுண் வீதி 1ம் ஒழுங்கை | முடிவு | 10 | 0.17 | 2.7 |
| 5 | 1038 | பிறவுண் வீதி இரண்டாம் (A) ஒழுங்கை | பிறவுண் வீதி | முடிவு | 10 | 0.103 | 3 |
| 6 | 1039 | பிறவுண் வீதி உப ஒழுங்கை | பிறவுண் வீதி | முடிவு | 10 | 0.208 | 3 |
| 7 | 829 | இடுகாட்டு வீதி | கெனடி வீதி | முடிவு | 10 | 0.122 | 3 |
| 8 | 1040 | செட்டித்தெரு 1ம் உப ஒழுங்கை | செட்டித்தெரு | முடிவு | 15 | 0.309 | 2.9 |
| 9 | 1041 | செட்டித்தெரு 2ம் உப ஒழுங்கை | செட்டித் தெரு | முடிவு | 10 | 0.146 | 3.1 |
| 10 | 1042 | செட்டித்தெரு 3ம் உப ஒழுங்கை | செட்டித்தெரு | முடிவு | 10 | 0.13 | 2.8 |
| 11 | 1043 | செட்டித்தெரு 4ம் உப ஒழுங்கை | செட்டித்தெரு | முடிவு | 10 | 0.041 | 1.8 |
| 12 | 1044 | செட்டித்தெரு 5ம் உப ஒழுங்கை | செட்டித்தெரு | முடிவு | 10 | 0.121 | 2.6 |
| 13 | 1045 | செட்டித்தெரு 6ம் உப ஒழுங்கை | செட்டித்தெரு | முடிவு | 15 | 0.231 | 3.1 |
| 14 | 830 | தேவாலய ஒழுங்கை | காரைநகர் வீதி | முடிவு | 15 | 0.05 | 3 |
| 15 | 292 | கொழும்புத்துறை 1ம் 3ம் இணைப்பு வீதி | கொழும்புத்துறை வீதி 1ம் குறுக்கு | கொழும்புத்துறை 3ம் குறுக்கு | 15 | 0.21 | 2.7 |
| 16 | 293 | கொழும்புத்துறை 1ம் 4ம் இணைப்பு வீதி | கொழும்புத்துறை வீதி 1ம் குறுக்கு | கொழும்புத்துறை 4ம் குறுக்கு | 15 | 0.254 | 2.4 |
| 17 | 294 | கொழும்புத்துறை 3ம் 4ம் இணைப்பு வீதி | கொழும்புத்துறைவீதி 3ம் குறுக்கு | கொழும்புத்துறை 4ம் குறுக்கு | 15 | 0.075 | 2.4 |
| 18 | 336 | Dr. கணேசரட்ணம் வீதி | ஆனந்தன்வடலி வீதி | இலந்தைக்குளம் வீதி | 20 | 0.369 | 3.3 |
| 19 | 179 | ஈச்சமோட்டைவீதி விதானையார் வீதி இணைப்பு வீதி | ஈச்ச மோட்டை வீதி | விதானையார் வீதி | 15 | 0.195 | 2.6 |
| 20 | 176 | எழிலூா 2ம் ஒழுங்கை | துண்டி வீதி | முடிவு | 15 | 0.163 | 2.4 |
| 21 | 177 | எழிலூா 3ம் ஒழுங்கை | துண்டி வீதி | முடிவு | 15 | 0.196 | 2.7 |
| 22 | 513 | இந்து மகளிர் 1ம் உபஒழுங்கை | பலாலி வீதி 5ம் ஒழுங்கை | முடிவு | 10 | 0.127 | 2.7 |
| 23 | 514 | இந்து மகளிர் 2ம் உபஒழுங்கை | பலாலி வீதி 5ம் ஒழுங்கை | முடிவு | 10 | 0.066 | 2 |
| 24 | 9 | ஆஸ்பத்திரி வீதி | காரைநகர் வீதி | கண்டி வீதி | 50 | 3.07 | 6 |
| 25 | 940 | ஆஸ்பத்திரி வீதி உப ஒழுங்கை | ஆஸ்பத்திரி வீதி | முடிவு | 10 | 0.165 | 2.5 |
| 26 | 295 | இலந்தைக்குளம் பிள்ளையார் ஒழுங்கை | இலந்தைக்குளம் வீதி | விதானையார் வீதி | 20 | 0.097 | 3 |
| 27 | 331 | ஆத்திக்காடு வடக்கு ஒழுங்கை | சின்னாலங்கண்டு ஒழுங்கை | கேணியடி ஒழுங்கை | 20 | 0.52 | 3 |
| 28 | 813 | கலிபா அப்துல் காதா வீதி | காரைநகர் வீதி | பொன்னாலை வீதி | 20 | 0.8 | 5 |
| 29 | 664 | கஸ்தூரிப்பிள்ளை ஒழுங்கை | காங்கேசன்துறை வீதி | கஸ்தூரியார் வீதி | 15 | 0.15 | 2.7 |
| 30 | 938 | கஸ்தூரியார் வீதி உப ஒழுங்கை | கஸ்தூரியார் வீதி | முடிவு | 13 | 0.11 | 3 |
| 31 | 831 | கெனடி ஒழுங்கை | புனித மரியாள் வீதி | முடிவு | 10 | 0.222 | 2.5 |
| 32 | 665 | கே.கே.எஸ் வீதி உப ஒழுங்கை | காங்கேசன்துறை வீதி | சீனியா ஒழுங்கை | 15 | 0.15 | 2.7 |
| 33 | 666 | குமாரசாமி வீதி உப ஒழுங்கை | குமாரசாமி வீதி | முடிவு | 15 | 0.092 | 3 |
| 34 | 178 | எழிலூர் 4ம் ஒழுங்கை | துண்டி வீதி | முடிவு | 10 | 0.112 | 2.4 |
| 35 | 296 | மாட்டின் உப ஒழுங்கை | மாட்டின் வீதி | முடிவு | 10 | 0.12 | 2.5 |
| 36 | 1046 | மருதடி வீதி 1ம் உப ஒழுங்கை | மருதடி வீதி | முடிவு | 10 | 0.13 | 2.1 |
| 37 | 1047 | மருதடி வீதி 2ம் உப ஒழுங்கை | மருதடி வீதி | முடிவு | 10 | 0.127 | 2.1 |
| 38 | 832 | முத்தமிழ் வீதி 4ம் ஒழுங்கை | காரைநகர் வீதி | முடிவு | 10 | 0.117 | 2.2 |
| 39 | 833 | முத்தமிழ் வீதி 5ம் ஒழுங்கை | காரைநகர் வீதி | முடிவு | 10 | 0.116 | 2.2 |
| 40 | 834 | முத்தமிழ் வீதி 6ம் ஒழுங்கை | காரைநகர் வீதி | முடிவு | 10 | 0.217 | 2.2 |
| 41 | 835 | முத்தமிழ் வீதி 7ம் ஒழுங்கை | காரைநகர் வீதி | முடிவு | 15 | 0.262 | 2.1 |
| 42 | 180 | மகேந்திரபுரம் ஒழுங்கை | துண்டி வீதி | முடிவு | 15 | 0.156 | 2.4 |
| 43 | 297 | நாகராஜா வீதி | புங்கங்குளம் வீதி | கொழும்புத்துறை வீதி | 15 | 0.367 | 2.2 |
| 44 | 1048 | நல்லூர் குறுக்கு உப ஒழுங்கை | நல்லூா குறுக்குத் தெரு | முடிவு | 13 | 0.103 | 2.8 |
| 45 | 10 | நாவலர் வீதி | பொன்னாலை வீதி | கண்டி வீதி | 33 | 4.2 | 4.7 |
| 46 | 837 | நித்தியஒளி வீட்டுத்திட்ட வீதி | காரைநகர் வீதி | முடிவு | 10 | 0.285 | 3 |

தொடர்ச்சி 12ம் பக்கம்...

காலைக்கதிர் Kalaikkathir

# யாழ்ப்பாணம் மாநகர சபை

## வீதிகளுக்கு பெயர் சூட்டுதல்

பின்வரும் வீதிகளை வர்த்தமானியின் பிரசுரித்து மாநகர சபைக்குரிய வீதிகளாக பதிவுசெய்யவுள்ளதால் இதற்கு பொதுமக்களின் கருத்தினை எதிர்பார்க்கின்றோம். மக்களின் கருத்துக்களை/அபிப்பிராயகளை எதிர்வரும் 20.07.10ஆம் திகதிக்கு முன்னர் ஆணையாளர், மாநகரசபை, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். வீதிகளின் இட அமைவுகள் பற்றிய சந்தேகங்களை மாநகரசபையில் அறிந்துகொள்ளமுடியும்.

11ம் பக்கத் தொடர்ச்சி...

| தொ. இல | குறியீட்டு இலக்கம் | வீதியின் பெயர் | தொடக்கம் | முடிவு | வீதிக்கோட்டு நீளம் (அடி) | வீதியின் நீளம் (கி.மீ) | சராசரி அகலம் - மீற்றர் |
|---|---|---|---|---|---|---|---|
| 47 | 121 | ஓடக்கரை ஒழுங்கை | அடப்பன் வீதி 1ம் ஒழுங்கை | ஓடக்கரை வீதி | 15 | 0.428 | 2.4 |
| 48 | 667 | பழம் வீதி இணைப்பு வீதி | பலாலி வீதி | பழம் வீதி | 10 | 0.108 | 2.4 |
| 49 | 182 | துண்டி 1ம் ஒழுங்கை | துண்டி வீதி | முடிவு | 10 | 0.042 | 2.1 |
| 50 | 183 | துண்டி 2ம் ஒழுங்கை | துண்டி வீதி | முடிவு | 10 | 0.096 | 2.7 |
| 51 | 184 | துண்டி 3ம் ஒழுங்கை | துண்டி வீதி | முடிவு | 10 | 0.124 | 2.4 |
| 52 | 429 | பருத்தித்துறை வீதி 5ம் ஒழுங்கை | பருத்தித்துறை வீதி | முடிவு | 12 | 0.08 | 3.4 |
| 53 | 936 | றக்கா வீதி உப ஒழுங்கை | றக்கா வீதி | முடிவு | 10 | 0.109 | 2.1 |
| 54 | 298 | சந்தனமாதா கோவில் உப ஒழுங்கை | கொழும்புத்துறை வீதி | முடிவு | 15 | 0.341 | 2.4 |
| 55 | 668 | சீனியர் ஒழுங்கை 1ம் உப ஒழுங்கை | சீனியர் ஒழுங்கை | முடிவு | 10 | 0.118 | 2.4 |
| 56 | 669 | சீனியர் ஒழுங்கை 2ம் உப ஒழுங்கை | சீனியர் ஒழுங்கை | முடிவு | 20 | 0.286 | 3 |
| 57 | 328 | சின்னாலங்கண்டு ஒழுங்கை | கண்டி வீதி | குகன் வீதி | 20 | 0.2 | 3 |
| 58 | 670 | சிவன் உப ஒழுங்கை | சிவன் வீதி | முடிவு | 10 | 0.126 | 3.3 |
| 59 | 671 | சிவப்பிரகாசம் வீதி உப ஒழுங்கை | சிவப்பிரகாசம் வீதி | முடிவு | 20 | 0.097 | 2.4 |
| 60 | 337 | சோமசுந்தரம் வழி உப ஒழுங்கை | சோமசுந்தரம் வழி | முடிவு | 10 | 0.222 | 2.4 |
| 61 | 841 | சூரியஒளி வீட்டுத்திட்ட வீதி | காரைநகா வீதி | முடிவு | 15 | 0.3 | 2.5 |
| 62 | 937 | ஸ்ரான்லி வீதி உப ஒழுங்கை | ஸ்ரான்லி வீதி | முடிவு | 13 | 0.115 | 3 |
| 63 | 828 | தம்பிராசா ஒழுங்கை | காக்கைதீவு வீதி | ஆனைக்கோட்டை பழம் வீதி | 20 | 0.21 | 3 |
| 64 | 185 | துண்டி 4ம் ஒழுங்கை | துண்டி வீதி | முடிவு | 10 | 0.096 | 2.4 |
| 65 | 186 | துண்டி 5ம் ஒழுங்கை | துண்டி வீதி | முடிவு | 10 | 0.132 | 2.1 |
| 66 | 187 | துண்டி 6ம் ஒழுங்கை | துண்டி வீதி | முடிவு | 10 | 0.116 | 3 |
| 67 | 188 | துண்டி 7ம் ஒழுங்கை | துண்டி வீதி | முடிவு | 10 | 0.145 | 2.1 |
| 68 | 189 | துண்டி 8ம் ஒழுங்கை | துண்டி வீதி | முடிவு | 10 | 0.132 | 2.4 |
| 69 | 194 | வளம்புரம் வீதி 5ம் ஒழுங்கை | துண்டி வீதி | முடிவு | 10 | 0.171 | 2.7 |
| 70 | 195 | வளம்புரம் வீதி 6ம் ஒழுங்கை | துண்டி வீதி | முடிவு | 10 | 0.112 | 2.7 |
| 71 | 291 | ஐயனார் வீதி உப ஒழுங்கை | ஐயனார் வீதி | முடிவு | 10 | 0.116 | 2.7 |
| 72 | 836 | முத்தமிழ் வீதி 8ம் ஒழுங்கை | காரைநகர் வீதி | முடிவு | 15 | 0.297 | 2.2 |
| 73 | 838 | பண்ணை மார்புச்சிகிச்சை 1ம் ஒழுங்கை | காரைநகர் வீதி | முடிவு | 15 | 0.193 | 2.7 |
| 74 | 181 | துண்டி வீதி | பழையபூங்கா வீதி | கொழும்புத்துறை வீதி | 25 | 2.244 | 5 |
| 75 | 299 | துரையப்பா ஒழுங்கை | விதானையார் வீதி | முடிவு | 10 | 0.192 | 2.5 |
| 76 | 939 | வைரவர்கோவில் ஒழுங்கை | ஆஸ்பத்திரி வீதி | சி.பொன்னம்பலம் வீதி | 25 | 0.1 | 8.3 |
| 77 | 190 | வளம்புரம் வீதி 1ம் ஒழுங்கை | துண்டி வீதி | முடிவு | 10 | 0.327 | 2.7 |
| 78 | 191 | வளம்புரம் வீதி 2ம் ஒழுங்கை | துண்டி வீதி | முடிவு | 10 | 0.216 | 2.7 |
| 79 | 192 | வளம்புரம் வீதி 3ம் ஒழுங்கை | துண்டி வீதி | முடிவு | 10 | 0.22 | 2.4 |
| 80 | 193 | வளம்புரம் வீதி 4ம் ஒழுங்கை | துண்டி வீதி | முடிவு | 10 | 0.236 | 2.4 |
| 81 | 839 | பண்ணை மார்புச்சிகிச்சை 2ம் ஒழுங்கை | காரைநகர் வீதி | முடிவு | 20 | 0.343 | 2.7 |
| 82 | 840 | பண்ணை மார்புச்சிகிச்சை 3ம் ஒழுங்கை | காரைநகர் வீதி | முடிவு | 15 | 0.191 | 2.7 |
| 83 | 300 | விதானையார் வீதி 1ம் ஒழுங்கை | விதானையார் வீதி | முடிவு | 10 | 0.181 | 2.7 |
| 84 | 2001 | விதானையார் ஒழுங்கை | கொழும்புத்துறை வீதி | புனித மரியாள் ஒழுங்கை | 10 | 0.21 | 2.4 |
| 85 | 1049 | வைமன் வீதி 1ம் ஒழுங்கை | வைமன் வீதி | முடிவு | 10 | 0.0976 | 3 |
| 86 | 1050 | வைமன் வீதி 2ம் ஒழுங்கை | வைமன் வீதி | முடிவு | 10 | 0.143 | 3.2 |
| 87 | 1051 | வைமன் வீதி 3ம் ஒழுங்கை | வைமன் வீதி | முடிவு | 13 | 0.094 | 3 |
| 88 | 1052 | வைமன் வீதி 4ம் ஒழுங்கை | வைமன் வீதி | முடிவு | 10 | 0.229 | 2.8 |
| 89 | 1053 | வைமன் வீதி 5ம் ஒழுங்கை | வைமன் வீதி | முடிவு | 10 | 0.13 | 2.6 |
| 90 | 1054 | வைமன் வீதி 6ம் ஒழுங்கை | வைமன் வீதி | முடிவு | 10 | 0.17 | 2.4 |
| 91 | 1055 | வைமன் வீதி 7ம் ஒழுங்கை | வைமன் வீதி | முடிவு | 13 | 0.087 | 3 |
| 92 | 1056 | வைமன் வீதி 8ம் ஒழுங்கை | வைமன் வீதி | முடிவு | 10 | 0.05 | 3.2 |

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 27.06.2023இல் வெளியிடப்பெற்றது.